விலை ரூபா: 7.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பதின்னான்கு

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 15 ஞாயிற்றுக்கிழமை (31.10.2004) தொலைபேசி - 2223378 ஒலி 317

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

# கூட்டுக்குள் வலுக்கிறது குத்துவெட்டு

# சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிரான பிரசாரத்தை ஜே.வி.பி. நிறுத்தவேண்டும்


## ஜனாதிபதி சந்திரிகா சீற்றம்

(நமது நிருபர்)

**சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பலத்த ஆதரவு கிடைத்திராவிடின், தற்போது அனுபவிக்கும் அதிகார பலத்தையும் புகழையும் அடைந்திருக்க ஜே.வி.பி.க்கு எந்த வாய்ப்பும் இருந்திராது என்று ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.**

தங்களது ஆதரவினால் மட்டுமே சந்திரிகாவின் சுதந்திரக் கட்சி ஆட்சியமைக்க வாய்ப்பு உருவானது என்று பல தடவை தெரிவித்துள்ள ஜே.வி.பி. ஆளும் கூட்டணியிலிருந்து விலகிவிடப் போவதாகப் பலதடவை சுதந்திரக் கட்சியினரை மிரட்டி வந்துள்ளது. ஆனால் இந்தத்தடவை நேரடியாக ஜனாதிபதி சந்திரிகாவின் அமைச்சர்களை நியமிப்பது தொடர்பான முடிவை எதிர்த்து கடுமையான விமர்சனங்களை தெரிவித்ததுடன் கூட்டணியிலிருந்து விலகிவிடப் போவதாக ஜே.வி.பி. ஜனாதிபதியை மிரட்டியுள்ளது. இது ஜனாதிபதி செயலகத்தை விசனத்துக்குள்ளாக்கியுள்ளது. ஜே.வி.பி.யின் இக்கருத்து தொடர்பாக கடும் அதிருப்தியை வெளிப்

(14 ஆம் பக்கம் பார்க்க)



ஐந்து நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசி நேற்றுமுன்தினம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை அவரது மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடுவதை படத்தில் காணலாம்.

## ஜனாதிபதித் தேர்தல் எப்போது? முடிவெடுப்பது தேர்தல் ஆணையாளரே

### வலியுறுத்துகிறார் பேராசிரியர் பீரிஸ்

இலங்கையின் தற்போது நடைமுறையில் உள்ள தேர்தல் முறையை மாற்றுவதற்கு சர்வ ஜன வாக்கெடுப்பு அவசியம் இல்லையென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான ஜீ.எல். பீரிஸ் கூறியுள்ளார்.

தேர்தல் முறையை மாற்ற வேண்டுமென அரசு நினைத்தால் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான குழுவின் சிபார்சை நடைமுறைப்படுத்த முடியும்.

கடந்த ஆட்சிக்காலத்தின் போது எதிர்கட்சி பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த தினேஷ் குணவர்த்தன தலைமையில் அமைக்கப்பட்ட குழு தேர்தல் முறை தொடர்பாக விரிவாக ஆராய்ந்து இடைக்கால அறிக்கையொன்றை சமர்ப்பித்திருந்தது. ஆனால் தேர்தல் முறையில் திருத்தம் கொண்டு வருவதற்கு அந்தக் குழுவின் ஆலோசனையை சேர்த்து கொள்வதில் எந்தவித தடையும் கிடையாது.

இதேவேளை அரசியல் சாசனத்திற்கு அமைய ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் சரியான

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி இந்தியா பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் புதன்கிழமை இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்தியா செல்லவிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா, இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம், பிரதமர் மன்மோகன்சிங், வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் உட்பட அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இந்தச் சந்திப்புக்களின்போது அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பான ஆலோசனைகளை ஜனாதிபதி பெற

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ரவூப் ஹக்கீம் - உடன் பதவி விலக வேண்டும்

### நேற்றுப் பதவியேற்ற அமைச்சர்கள் கோரிக்கை

(கொழும்பு)

முஸ்லிம் சமூகத்தினரின் நன்மை கருதி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் உடனடியாக பதவி விலக வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று அமைச்சர்களாக பதவி பிரமாணம் செய்துகொண்ட பின் ஊடகவியலாளர் மாநாட்டில் நடத்திய முஸ்லிம் காங்கிரஸின் மூன்று உறுப்பினர்கள் இக் கோரிக்கையினை விடுத்தார்கள்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு கொலைகளை கட்டுப்படுத்த இராணுவம் உறுதிமொழி வழங்கியது

### நேற்றைய சந்திப்பு குறித்து கௌசல்யன்

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று மட்டக்களப்பு வவுணதீவு யுத்த சூனியப் பிரதேசத்தில் நடைபெற்றது.

நேற்றைய சந்திப்பின்போது,

இராணுவச் சோதனைச் சாவடிகளில் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அண்மைக்காலங்களில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இடம்பெற்று வரும் படுகொலைகள் என்பன குறித்து ஆராயப்பட்டது.

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பதில் தலைவர் ஹக்ரொப் ஹொக்லன்ட் தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில்,

விடுதலைப் புலிகளின் சார்பில் மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் தயாமோகன், நிர்வாகச் செயலகப் பொறுப்பாளர் மார்ஷல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இராணுவத் தரப்பில் 23 ஆவது படைப் பிரிவுக் கட்டளை அதிகாரி கேணல் லக்சிறி அமரதுங்க, விசேட அதிரடிப்படை பொலிஸ்மா அதிபர் வசந்த ரத்னாயக்கா,

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அரசுடன் இணைந்துகொண்ட முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிகளுக்கு அமைச்சு பதவிகள் வழங்கப்பட்டன

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் மாற்றுக் குழுவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர் அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சுக்களாக நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் எஸ். அமீர்அலி மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு அமைச்சராகவும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நஜீப் எ. மஜீத் திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு அமைச்சராகவும் வன்னி மாவட்ட அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு அமைச்சராக ரிசாத் பதியுதீனும் சத்தியப்பிரமாணம் செய்தனர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு எதிராக பெண் ஒருவருடன் தொடர்புபட்ட அவதூறுகளை அம்பலப்படுத்தியதன் மூலம்மூவரும் கட்சி யிலிருந்து விலக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து எம்.பிக்கள் மூவரும் அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சு பதவிகளைப் பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-8-121)

## சமாதானப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படும்

### நம்பிக்கை வெளியிட்டுள்ளார் அகாசி

(திருகோணமலை)

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளிற்குமிடையிலான சமாதானப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாக ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டால் சில முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும என அவர் கூறினார்.

கிழக்கு மாகாணத்திற்கான விஜயம் மேற்கொண்டு திருகோணமலைக்குச் சென்ற யசூசி அகாசி அங்கு முக்கிய தரப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது இதனைத் தெரிவித்துள்ளார். பின்னர் அங்கிருந்து மட்டக்களப்பிற்குச் சென்றார்.

அங்கு மட்டக்களப்பு 23-3வது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் வஜிரவிஜய குணவர்த்தனா, 23-2வது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி லக்சிறி அமரதுங்க ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடினர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இன்று ஒரு தகவல்

# சிரிப்பு மருந்து

நான் ஒன்று சொல்கிறேன் அதை நீங்கள் செய்தீர்கள என்றால் உங்கள் உடலுக்கு மிகவும் நல்லது. நான் சொல்வதை நீங்கள் செய்தீர்கள் என்றால் உங்கள் உடலில் என்னென்ன நடக்கும் தெரியுமா? இதை நான் சொல்வது இருக்கட்டும் முதலில் டாக்டர்கள் சொல்வதைக் கேளுங்கள்.

சுவாசப் பையில் பிராணவாயு அதிகமாக நிரம்புகிறது. உடலில் இரத்தம் வேகமாகப் பாய்கிறது. ஈரலையும் வயிற்றுத் தசைகளையும் தட்டி எழுப்புகிறது. தேகப் பயிற்சி செய்யும் போது உடலில் தசைகள் அசைந்து பலப்படுகிறதல்லவா? அதே போல் பலம் சேரும். இரத்தத்தில் சக்தியைக் கொடுக்கும் சர்க்கரைப் பொருளைப் பாய்ச்சுகிறது. ஆகையினால் இதை விடச் சிறந்த மருந்து வேறு எதுவுமில்லை.

எது தெரியுமா? இப்போது நான் சொல்லிக் கொண்டு வந்த இவ்வளவும் உங்களுக்கு வேண்டுமென்றால் நீங்கள் வேறு ஒன்றும் செய்யவேண்டாம். வாய் விட்டுச் சிரித்தால் போதும். வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்று சொல்வார்கள். அது மிகவும் உண்மை என்று மருத்துவர்கள் சொல்கின்றனர். ஆகையினால் காசில்லாமல் மருத்து வேண்டுமென்றால் கலகலவென்று சிரியுங்கள் அதுபோதும்.

" சிரிப்பதற்கு நாங்கள் தயார். ஆனால் சிரிப்பு வரமாடடேன் என்கிறதே. அதற்கு நாங்கள் என்ன செய்வது? இது தான் பலருடைய கேள்வி. வாழ்க்கையின் உண்மையைப் புரிந்து கொள்ளுங்கள். எதையும் கடுமையாக எடுத்துக் கொள்ளும் பழக்கத்தை இன்றோடு விட்டு விடுங்கள். வாழ்வை இலகுவாக எடுத்துக் கொள்ளுங்கள் வாய் விட்டுச் சிரிக்கலாம்.

கலைவாணர் அப்படித்தான் இருந்தார். நெருக்கடியான நேரம் கூட அவரை நிலை குலைய வைத்ததில்லை. ஒரு முறை அவரும், அவரைச் சேர்ந்தவர்களும் நாகர் கோவிலிலிருந்து சென்னைக்கு சொந்தக் காரில் வந்து கொண்டிருந்தார்கள். வரும் வழியில்... கோவில் பட்டிக்கு பக்கத்தில் ஒரு பெரிய விபத்து. அவர்களின் கார் ஒரு புளியமரத்தில் மோதி அப்படியே நொறுங்கி விட்டது. காரில் இருந்தவர்களுக்கும் பலமான காயம். மெதுவாக ஒவ்வொருவராக வெளியே எடுத்தார்கள். தேவைப்பட்டவர்களுக்கு முதலுதவி செய்தனர். மருந்து கொடுத்தார்கள்.

ஒரு விரிப்பை எடுத்து தெருவோரமாக உள்ள புல் தரையில் போட்டு அதில் உட்கார்ந்திருந்தனர். ஒருவரை மட்டும் பக்கத்து ஊருக்கு அனுப்பி வாகனம் கொண்டு வர அனுப்பிவிட்டு ஏனையோர் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். கலைவாணரும் வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார். கார் புளியமரத்தில் பதிந்து போய்க் கிடக்கிறது. அந்த நேரத்தில் அந்த வழியே போனவர்கள் இதைப் பார்த்து விடுகின்றனர்.

ஐயையோ... நம்முடைய கலைவாணர் அல்லவா? இவர் என்று பதறிக்கொண்டே ஓடி வந்தார்கள். அண்ணே! என்ன ஆனது? என்று கேட்டார்கள். என். எஸ் கிருஷ்ணன்... கொஞ்சம் கூடப் பதறவில்லை. வெற்றிலையில் சுண்ணாம்பு தடவிக் கொணடே சொன்னார் அதெல்லாம் ஒன்றுமில்லை. மிகவும் களைப்பாக இருந்தது அதுதான் காரை அந்த புளியமரத்தில் சாத்தி வைத்துவிட்டு இப்படி உட்கார்ந்திருக்கிறோம் என்றார்.

அவரது நிலையில் நாம் இருந்திருப்போமானால் அந்த நேரத்தில் அப்படி சொல்லத் தோன்றுமா என்று யோசித்துப் பாருங்கள். அவர் வாழ்க்கையை ஒரு சுமையாக நினைக்கவில்லை. லேசாக நினைத்தார். அதனால்தான் அவரால் அப்படிச் சொல்ல முடிந்தது. கார் நொறுங்கிப் போனதற்கே அவர் கவலைப்படவில்லை. கால் செருப்பின் வார் அறுந்து போனால் நாம் எவ்வளவு கவலைப்படுகிறோம். அதுதான் அவருக்கும் நமக்கும் உள்ள வித்தியாசம்.

இதுவரைக்கும் போனது போகட்டும் இனி மேலாவது கொஞ்சம் வாய்விட்டுச் சிரித்துப் பார்க்கலாம். தினம் ஒரு முறையாவது அப்படிச் செய்யுங்கள். ஒரு எச்சரிக்கை இரண்டு மூன்று பேருடன் சேர்ந்திருக்கும் போது வாய்விட்டுச் சத்தம் போட்டுச் சிரியுங்கள். ஆனால்... நீங்கள் தனியாக உட்கார்ந்திருக்கும் போது அப்படிச் சிரிக்காதீர்கள். பார்ப்பவர்கள் சந்தேகப்படுவார்கள்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# விமல் வீரவன்ஸவின் கூற்றுக்கு டிலான் பெரேரா கடும் கண்டனம்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ அண்மையில் ஆற்றிய உரையில் ஜனாதிபதி தொடர்பாக வெளியிட்ட கருத்துக் குறித்து பிரதியமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமைப்பு அதிருப்தியும் கண்டனமும் வெளியிட்டுள்ளது.

கடந்த 25 ஆம் திகதி இரத்தினபுரியில் விமல் வீரவன்ஸ உரையாற்றுகையில்,அரசியல் யாப்பின் அடிப்படையில் ஜனாதிபதிக்கு நிறைவேற்று அதிகாரம் இருந்த போதிலும், கடந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசின் காலத்தில் அந்த நிறைவேற்று அதிகாரத்தைச் செயற்படுத்த முடியாதென்று கூறியிருந்தார்.

இந்தக் கூற்றை பாராளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ஸ திருத்திக் கொள்ளாததன் காரணமாக இது தொடர்பாக வெளி வந்த அறிக்கைகள் உண்மையென ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையேற்படுமென கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளரும் தலைவருமான பிரதியமைச்சர் டிலான பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதி தனிப்பட்ட முறையிலும் அரசாங்க மட்டத்திலும் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியேற்பட்டது.

எவவாறாயினும் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ யதார்த்த நிலையைப் புரிந்து கொள்ளாது ஜனாதிபதிக்கு சேறு பூசும் வகையில் ஆற்றிய உரை கவலைக்குரியது.

விஷேடமாக விமல் வீரவன்ஸ போன்ற கட்சித் தலைவர் ஒருவர் இவ்வாறானதொரு கருத்தை வெளியிட்டுள்ளமை ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்றது. கொள்கை அடிப்படையில் வேறுபாடுகள் இருப்பினும்,மக்கள் விடுதலை முன்னணியுடன் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டுமென்பதே எமது விருப்பமாகும் எனவுமபிரதியமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். (ந-8)

# நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறோம்

## ஜனாதிபதி உரை

(கொழும்பு)

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் தாம் அர்ப்பணிப்போடு செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இதற்காக யுத்த நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப் போவதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, எவ்வாறாயினும் குறுகிய காலத்தில் சமாதானத்தை ஏற்படுத்துவது முடியாத காரியமெனவும் தெரிவித்துள்ளார். குருநாகலில்கடந்த வியாழனன்று நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந் தும் உரையாற்றுகையில்,



அரசியல் எதிரிகள் எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்த போதிலும், மக்களின் ஆதரவு நிலைக்கும் வரை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் ஆட்சியில் இருக் கும்.

நாட்டின் அபிவிருத்தியைப் போன்று இனப் பிரச்சினையும் பெரும் சவால் தான். எனினும் ,நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நாம் அர்ப்பணிப்போடு செயற்படுவோம்.

நாட்டை ஒற்றுமைப்படுத்தி ஒருமைப்பாடு மிக்க நிலையான இலங்கையொன்றைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கவும் அரசாங்கம் தயாராகி வருகிறது எனவும் மேலும் தெரிவித்தார். (ந)

## இராசி பலன்

**31.10.2004**

**(ஐப்பசி15, ஞாயிற்றுக்கிழமை)**

**திருதியை பிற்பகல் 12.20 மணிவரை**

**ரோகிணி பிற்பகல் 6.57 மணிவரை**

**இராகுகாலம் 4.33- 10.03 மணிவரை**

**சுபநேரம் 9.03-10.33 மணிவரை**

**கௌரி விரதம் 9ம் நாள்**

- **மேடம்** காரிய தடங்கல், அமைதிக் குறைவு, போசன சுகக்குறைவு, தனவிரயம்.
- **இடபம்** பெரியோர் சந்திப்பு, முயற்சி கைகூடும், புதிய திருப்பம், தெய்வ சிந்தனை.
- **மிதுனம்** காரிய அலைச்சல், உறவினர் வெறுப்பு, சயன சுகக்குறைவு, தனவிரயம்.
- **கடகம்** கீர்த்தி, நல்ல சம்பவம், காரிய சித்தி, நல்ல வருமானம்.
- **சிங்கம்** தொழில் சிந்தை, அதிக முயற்சி, சுபநிகழ்வு, கௌரவமான நிலை.
- **கன்னி** புதிய திருப்பம், பிதா சிந்தை, சரீர பிரயாசை, பிரயாணம்.
- **துலாம்** அமைதிக் குறைவு, உறவினர் மனஸ்தாபம், காரிய தடங்கல், ஆரோக்கியக் குறைவு
- **விருச்சிகம்** குடும்ப் மகிழ்ச்சி, தெய்வ சிந்தை, காரிய அனுகூலம், பெருமையடைதல்.
- **தனுசு** நல்ல சம்பவம், ஆரோக்கியம், காரிய சித்தி, நல்ல செய்தி.
- **மகரம்** குடும்பக் கவலை, பணவிரயம், முயற்சி தாமதம், தொழில் சிந்தை.
- **கும்பம்** மனச் சோர்வு, காரிய தாமதம், புதிய விடயம், மாதா சுகம்.
- **மீனம்** அந்நியர் சந்திப்பு, காரிய அனுகூலம், ஜனவசியம், தொழில் விருத்தி.

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

**- வளவன்**

# ஈழத்தமிழரை தாயகத்திற்கு திருப்பி அனுப்ப ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்ற ஈழத்தமிழரை இலங்கைக்குத் திருபபி அனுப்ப மத்தியஸ்தம் வகிக்க இந்திய அரசாங்கம் முன்வந்துள்ளது.

இதன்படி அடுத்த வருடம் ஜனவரி மாதம் சுமார் 2ஆயிரம் அகதிக் குடும்பங்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டு மீளக் குடியமர்த்தப்படவுள்ளன. அகதிகளை இலங்கைக்குக் கொண்டு வருவதற்கு இந்திய நிறுவனமொன்று முன்வந்துள்ளது. இந்த நிறுவனம் ஏறகனவே வவுனியா அரச அதிபருடன் இது விடயம குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

இதேவேளை, அகதிக் குடும்பம் ஒன்றை மீளக்குடியமர்த்த 2 இலட்சம் ரூபா நிதி தேவையென மதிப்பிடப்பட்டுளளது. (ந-8)

# வட-கிழக்கு பிரச்சினை குறித்து அனைத்து அரசியல் கட்சிகளுடனும் ஹெல உறுமய பேச்சு நடாத்தவுள்ளது

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரச்சினை குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை சந்தித்து கலந்துரையாடவிருப்பதாக ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோக தேரர் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்குப் பிரச்சினை நாட்டின் மிக முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துள்ள நிலையில், அது குறித்துத் தாம் அரசியல் தலைவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மக்கள் விடுதலை முன்னணி உட்பட ஏனைய தமிழ்-சிங்கள-முஸ்லிம் அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்களுட னும் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாக உடுவே தம்மாலோக தேரர் தெரிவித்தார்.

நாடு எதிர்நோக்கியுள்ள அபாயகரமான சூழ்நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காக அரச நிர்வாகிகளின் மனதில அறநெறிக் கொள்கைகளை புகுத்துவதற்கு இச் சந்திப்புக்கள் சாதகமாக அமையுமென்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ந)

## கலந்துரையாடல்

பூநகரி இராணுவப் படைத்தளம் விடுதலைப் புலிகளால் வெற்றிகொள்ளப்பட்டதன் பதினொராம் ஆண்டு நிறைவு விழா ஏற்பாடு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப3.00 மணிக்கு பூநகரி மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதன் முதலாக விடுதலைப்புலிகளால் யுத்த டாங்கிகளும் ஆறு நீருந்து விசைப்படகுகளும் பெருமளவு அதிநவீன ஆயுதங்களும் கைப்பற்றப்பட்ட பூநகரி நாகதேவன் துறை இராணுவக கடற்படைக் கூட்டுப்படைத்தளம், கடந்த 1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் நாள் புலிகளால் வெற்றிகொள்ளப்பட்டது. அத்தோடு பூநகரி வேருவில் இந்து மகா வித்தியாலய மண்டபத்தில் நாளை பிற்பகல் 3.00 மணிக்கு மாவீரர் நாள் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றும் நடைபெறவுள்ளது. (ந-121)

ஜூட் கொலை வழக்கு

# சந்தேக நபரை இனம் காணும் அடையாள அணிவகுப்பு ஒத்திவைப்பு

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிப் போராளி ஜூட் எனப்படும் பாலசிங்கம் ஜெயநாதன் கொலை தொடர்பாக நேற்றுமுன்தினம் அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் நடைபெறவிருந்த அடையாள அணிவகுப்பு பாதுகாப்புக் காரணங்களுக்காக காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது.

கடந்த 9ஆம் திகதி அக்கரைபபறறு பஸ் நிலையத்தில் குறிப்பிட்ட போராளி கருணா குழுவைச் சேர்ந்த இருவரினால் சுட்டுக்கொல்லபபட்டார். கொலையாளிகளில ஒருவர் விசேட அதிரடிப்படை யினரால் துரத்திச் சென்று சுட்டுக் கொல்லபபட்டுளள போதிலும் மற்றுமொருவர தபபியோடி விட்டார். கடந்த 23ஆம் திகதி இரவு மட்டக்களப்பு ஆரையம்பதியில் விசேட அதிரடிப் படையினரால் இரவு தொலை நோக்கி கருவியுடன் கைது செய்யப்பட்ட சூட்டி எனப்படும் கண்ணப்பன கணேசன் என்பவரே இந்தத் தப்பியோடிய நபர் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

எதிர்வரும் 5ஆம் திகதி வரை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இந்நபரை நேற்றுமுன்தினம் அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்பிற்கு ஆஜர்படுத்துமாறு மட்டக்களப்பு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இருந்த போதலும் மட்டக்களப்பு சிறைச்சாலை யிலிருந்து இவரை அழைத்து வருவதில் பாதுகாப்பு பிரச்சினை இருப்பதாக சிறைச்சாலை அதியட்சகர் அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் அறிக்கை சமர்ப்பித்தார். இதனை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம காலவரையறையின்றி அடையாள அணிவகுப்பை ஒத்திவைததுள்ளது. (ரு-121)

# அமைச்சர்களாக பதவியேற்கும் நிகழ்வு இறுதிநேரத்தில் இரத்து

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர் நேற்றுமுன்தினம் அமைச்சர் பதவிகளை ஏற்கவிருந்த போதிலும் கடைசி நேரத்தில் அது கைகூடவில்லை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ மாற்றுக் குழு எனக் கருதப்படும் பாராளுமன்ற உறுப்பினரான ரிசாத் பதியுதீன் (வன்னி), அமீர் அலி (மட்டக்களப்பு) மற்றும் நஜீப் ஏ.மஜீத் (திருமலை) ஆகியோரே இந்த அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்க விருந்தனர்.

இது தொடர்பான சத்தியப் பிரமாணம் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவிருந்த போதிலும் இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக்கும் ஜனாதிபதிக்குமிடையில் தற்போது நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்பும் முயற்சியில் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி ஈடுபட்டுள்ளார். (க)




கரிதாஸ் பிரான்ஸ் நிறுவனத்தின் ஆசிய, மத்திய கிழக்குப் பிராந்தியங்களுக்குப் பொறுப்பதிகாரி அலோசியஸ் ஜோன் நேற்றைய தினம் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளை அதன் அலுவலகத்தில் சந்தித்த போது எடுக்கப்பட்ட படம். படம்:- சிவசங்கர்.



கல்வி உயர்கல்வி அமைச்சின் சித்திரப் பாடக்கல்விப் பணிப்பாளர் துஷார குணதிலக தலைமையில் 50 பேர் கொண்ட குழுவினர் நேற்று யாழ். மத்திய கல்லூரியில் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு சித்திரபாடம் பற்றிப் பயிற்சி வழங்குவதைப் படத்தில் காணலாம்.

படம் :- சிவசங்கர்





இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் செல்வகுமாரவுடன் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி அரசியல்துறையின் யாழ். மாவட்ட ஊடகத்துறைப் பொறுப்பாளர் இமையவன் மற்றும் யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றிய பொறுப்பாளர் சுதாஸ் ஆகியோரை முதலாவது படத்திலும் யூ.என்.எச். சி. ஆர் பிரதிநிதிகள் மற்றும் ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதிகளை இவர் சந்திப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

படம்:- சிவசங்கர்.

# சிறைக் கைதிகளை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதில் பெரும் சிரமம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து வெளிமாவட்ட சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ள சிறைக்கைதிகளை விசாரணைக்காக மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்திற்கு அழைத்து வருவதில் சிறைச்சாலை நிர்வாகம் பல சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் சச்சு மாஸ்டர் உட்பட இருவர் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்து, சிறைக்கைதிகள் சிலர் பாதுகாப்புக் கருதி பதுளை, மொனராகலை, பொலநறுவை ஆகிய சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டனர்.

இந்தக் கைதிகளை குறிப்பிட்ட தவணைகளில் நீதிமன்றத்துக்கு அழைத்து வருவதற்கு சிறைச்சாலை நிர்வாகம், இராணுவம் அல்லது விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பைப் பெறவேண்டியுள்ளது. ஆனால் அதற்கு பாதுகாப்புத் தரப்பினர் பாதுகாப்பு வழங்கத் தயாரில்லை என அறிவித்ததாக கூறப்படுகின்றது.

இதனால் கைதிகள் நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகாததால் விளக்கமறியல் காலம் நீடிக்கப்பட்டு வருகின்றது. (க)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின்

# சமாதானத்தை வலியுறுத்தும் ஆக்கத்திறன் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

சமாதானத்தை வலியுறுத்தி சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்கள் இடையே ஆக்கத்திறன் போட்டிகளை நடாத்தவுள்ளது.

சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டுப்போயுள்ள இந்த நிலையில், சமாதானத்தை வலியுறுத்தும் வகையில், கட்டுரை, கவிதை, சிறுகதை, ஓவியம் மற்றும் பேச்சுப் போட்டிகள் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்படவுள்ளன.

மேற்படி போட்டிகள் அனைத்தும் 'தமிழர் தேசிய பலமும் சமாதானமும்' 'தமிழர் அடிப்படைப் பிரச்சினைகளும் அவற்றிற்கான சமாதானத் தீர்வுகளும் 'இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையும் சமாதானப் பேச்சும்' என்பவற்றை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும், அத்துடன் மக்கள் படும் அவலங்களும் யுத்தத்தின் கோரக் காட்சிகளும் ஓவியப் போட்டியில் வெளிப்படுத்தப்படலாம்.

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளில் இருந்தும் இப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள மாணவர்களின் விபரங்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பிவைக்குமாறு பாடசாலை அதிபர்களை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை கேட்டுள்ளது.

மேற்படி போட்டிகளில் அனைத்தும் தரம் 9,10,11 ஆகியவற்றை உள்ளடக்கியதாக கீழ்ப் பிரிவாகவும், க.பொ.த உயர்தர மாணவர்களை உள்ளடக்கி மேல் பிரிவாகவும் இரு பிரிவுகளாக நடாத்தப்படவுள்ளன.

பாடசாலை ரீதியான போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பெறுவோருக்கான போட்டிகள் கோட்ட மட்டத்திலும் பின்னர் வலய மட்டத்திலும் நடாத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ரு-122)

# தீர்வில்லாத ஓர் சமாதான சூழலை நகர்த்தி அரசு தன் ஆட்சியை வலுப்படுத்த முனைகிறது

## அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி உரை

(கோப்பாய்)

**தீர்வில்லாததோர் சமாதானச் சூழலை நகர்த்திச் செல்வதன் ஊடாக ஆட்சியை வலுப்படுத்தி காலத்தை நகர்த்தும் வகையில் இன்றைய அரசு செயற்பட்டு வருகின்றது. இதற்காகப் பல சலுகைகளை அள்ளி வீசி அரசியல் வாழ்வியலை வலுவூட்டி தமிழர் தேசியத்தை நலிவுறச் செய்வதிலும் ஆர்வம் காட்டி வருகின்றது. இவ்வாறான அற்ப சலுகைகளுக்காக இதை ஒருபோதும் அங்ககரிக்க முடியாது.**

இவ்வாறு யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி கோப்பாய் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போது தெரிவித்தார்.

தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அதற்கான பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்தும் இழுத்தடிக்கப்படாது உடன் அது தொடரப்படவேண்டும் என்ற விடயத்தில் அரசுக்கு எதிர்க்கட்சி ஆதரவளிக்கின்றது என்பது வரலாற்றில் வித்தியாசமான ஒரு புதிய திருப்புமுனையாக அமைந்துள்ளது.

எனவே, இதற்கு மதிப்பளித்து அரசு பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தால் இனப்பிரச்சினை விடயத்தில் சமநிலைத் தன்மையைப் பேணமுடியும். இல்லாவிட்டால் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகி வரும்.



தேசிய கோரிக்கைகள் சிங்களவர்களுக்கோ, தமிழ் பேசும் முஸ்லிம்களுக்கோ எதிரானதல்ல. தமிழர்களின் அபிலாஷை வாழ்வியல் உரிமைகள் என்பனவற்றை உள்ளடக்கியது.

இது மதிக்கப்பட்டால் மாத்திரமே சிங்கள மக்களும் நாட்டில் சுயநிர்ணய உரிமையுடன் வாழ முடியும. அல்லாத விடத்து அவர்கள் வாழமுடியாது.

இதனால், அரசாங்கம் எமது கோரிக்கையை ஏற்கவேண்டும். இழக்கப்பட்டிருக்கும் வாழ்வுரிமையை வலுப்படுத்தி எமது இனம் சுதந்திரமாகவும், தன்னாட்சியுடைய்தாகவும் வாழ்வதற்காகவே 17 ஆயிரத்து எழுநூற்று எழுபத்து நான்கு மாவீரர்கள் தம் இன்னுயிர்களைத் தியாகம் செய்துள்ளனர். இவ்வாறு அரசு தமிழர் தேசியத்தை நலிவடையச் செய்யும் வகையில் அள்ளி வீசும் அற்ப சலுகைக்காக எமது மக்கள் மண்டியிடக் கூடாது. கலாசார சீரழிவின்றி ஒழுக்கக் கட்டுமாணப் பண்புடன் கூடிய சமூகத்தை உருவாக்க ஆசிரியர்களும் மாணவர்களும் முன் வரவேண்டும் என இளம்பரிதி மேலும் தெரிவித்தார். (ப-79,10)

# ஒஸ்லோ உடன்படிக்கையின் பிரகாரம் பேச்சுக்களை ஆரம்பிப்பது எவ்வாறு?

## இதுவே தீர்க்க முடியாத பிரச்சினை என ஜே.வி.பி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஒஸ்லோவில் காணப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை எவ்வாறு தொடங்குவது என்பது தீரகக முடியாத பிரச்சினையாக மாறியுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக வடககு-கிழக்கிற்கான இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை அடிப்படையாகக் கொண்டு சமஷ்டி வரம்புக்குள் தீர்வு காணும் வழிவகைகள் பற்றி பரிசீலிக்க முடியும் என்பது மாத்திரமே ஒஸ்லோவில் எட்டப்பட்ட இணக்கப்பாடாகும்.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் கட்சியின் மூத்த அரசியல்வாதியான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸும் ஒஸ்லோ உடன்பாட்டின் அடிப்படையில் உடனடியாக பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று கூறி வருகின்றனர்.

எனினும் இந்த ஒஸ்லோ உடன்பாட்டைத் தெளிவாக வரையறுக்கும் எந்தவித ஆவணமும் கிடையாது என்று விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கூறியுள்ளார்.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி தமது கருத்துக்களை நியாயப் படுத்துவதற்கு அன்ரன் பாலசிங்கம் எழுதிய "வோறன்றீஸ்" என்ற புத்தகத்தை ஆதாரமாகக் காட்டி வருகின்றது எனவும் மக்கள் விடுதலை முன்னணி சுட்டிக்காட்டியுள்ளது. (ற-8)

# பிக்குமார் அவமதிக்கப்பட்டமைக்கு ஐ.தே.கட்சி கடும் ஆட்சேபம்

(கொழும்பு)

கனேடியத் தூதரகத்திற்கு கடவுச்சீட்டு பெறச் சென்ற சமயம் தூதரக அதிகாரிகள் பௌத்தபிக்குமாரை அகௌரவம் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்ட விடயம குறித்து கவனம் செலுத்தியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

பௌத்த பிக்குமாருக்கு அகௌரவம் ஏற்படுத்தப்பட்ட இந்தச் சம்பவம் தொடர்பாகக் கண்டித்து,இச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்துமாறு வெளிநாட்டமைச்சு கனடா தூதரகம் ஆகியவற்றுக்கு வேண்டுகோள் விடுக்கபட்டுள்ளது எனவும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. (ற-8)

# கசிப்பு வைத்திருந்த நபருக்கு 1 வருட கடூழியச் சிறைத்தண்டனை

(யாழ்பபாணம்)

சட்டவிரோதமாக கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் முஸ்லிம் கல்லூரி வீதியைச் சேர்ந்த நபரொருவரை யாழ். மதுவரித் திணைக்களத்தினர் கைது செய்து கடந்த செவவாய்க்கிழமை யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இது குறித்து விசாரித்த நீதிபதி, இந் நபருக்கு 1 வருட கடுழியச் சிறைத்தண்டனை விதித்ததுடன், 50 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் உத்தரவிட்டார்.

இந்த அபராதத்தை செலுத்தத் தவறின் மேலும், 6 மாதகால கடுழியச் சிறைத்தண்டனை அனுபவிகக வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது. (ற-19)


# 4வது பிறந்தநாள் வாழ்த்து



## செல்வி அர்ச்ஜனா

"அர்ச்ஜனம்" அல்வாய் வடக்கு, அல்வாயைச் சேர்ந்த **அகிலன் - யோபிகா** தம்பதிகளின

**செல்வப்புதல்வி அர்ச்ஜனா**

தனது 4ஆவது பிறந்தநாளை 31.10.2004 இன்று வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அம்மா, அப்பா, அண்ணா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, தாத்தா, சித்தாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், உற்றார், உறவினர்கள் அனைவரும் சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

(8955)


# பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களை புனர்மைக்க நடவடிக்கை எடுக்குமாறு சுரேஷ் எம்.பி.கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களை புனரமைப்புச் செய்து அவை உரிய முறையில் இயங்குவதற்கு ஏற்ற வகையிலான நடவடிக்கைகளை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு கோரி, யாழ். மாவடட அரசாங்க அதிபர் செ. பத்மநாதன்,கூட்டுறவு ஆணையாளர் மற்றும் பனை தென்னை வள அபிவிருத்திச் சபைத் தலைவர் ஆகியோருக்கு இவர் மகஜர்களை அனுப்பி வைத்துள்ளார்.

அனுப்பி வைக்கப்பட்டு மேற்படி மகஜரில்,

யாழ்.மாவட்டத்தில் 19 பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்கள் உள்ளன. முன்னர் இச்சங்கங்களால் வெல்லம், பனஞ்சீனி, கருப்பட்டி முதலியவை உற்பத்தி செய்யப்பட்டு வந்தன. ஆனால், யுத்த நடவடிக்கையினால் இத் தொழிற்சாலைகள் அனைத்தும் அளிந்து சேதமடைந்துள்ளன. சீனி போன்ற அத்தியாவசியப் பொருட்கள் விலையேறிச் செல்லும் இக்கால கட்டத்தில், இத்தொழிற்சாலைகள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு தொழிற்படவேண்டியது அவசியமாகும்.

ஆனால புனர்வாழ்வு அமைச்சோ தொண்டர் நிறுவனங்களோ இத் தொழிற்சாலைகளை புனரமைப்பது தொடர்பில் உரிய கவனம் செலுத்துவதில்லை. இது வருந்தத்தக்கது.

அது மாத்திரமன்றி யாழ். குடாநாட்டில மிகுதியாகும் பனம், தென்னம் கள்ளு ஆகியன மதுசாரம தயாரிப்பதறகாக திக்கம் வடிசாலைக்கு அனுப்பப்படுகின்றன. ஆனால், திக்கம் வடிசாலை இக் கள்ளிற்குப் பெறுமதியான கொடுப்பனவிற்கு பதிலாக, சாராயத்தை இச் சங்கங்களுககு கொடுத்து அதனை விற்றுக் கள்ளிற்கான பணத்தை எடுத்துக் கொள்ளும் படி கூறுகின்றது.

ஆனால், சாராயம் விற்பதற்கு எந்தச் சங்கங்களுக்கும் அனுமதிப் பத்திரம் கிடையாது. எனவே, மதுபானம் விற்க அனுமதிப்பத்திரம் இல்லாத சங்கங்களுக்கு எந்த அடிப்படையில் திக்கம் வடிசாலை சாராயத்தை வழங்குகின்றது? அனுமதிப் பத்திரம் இல்லாத காரணத்தால் இச் சங்கங்களின் ஊழியர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றம் என்றும், சிறைச்சாலை என்றும் சீரழிகின்றார்கள்.

சாராய உற்பத்திக்கு அனுமதி பெற்ற திக்கம் வடிசாலை சாராயத்தைச் சட்ட ரீதியாக சந்தைப்படுத்தவும, அதனைச் சங்கங்கள் சட்ட ரீதியாக விற்பனை செய்வதற்கும் அனுமதிப் பத்திர்த்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது திக்கம் வடிசாலையின் கடமையாகும்.

அது மாத்திரமல்லாமல் பனம் பொருள் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம், அரச அதிபர் கூட்டுறவு ஆணையாளர் ஆகியோர் ஒன்றிணைந்து இவ்விடயம் குறித்து சரியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இதன்மூலம் தான் இப்பனம் பொருள கூட்டுறவுச்சங்கங்களை சிறப்பான முறையில் இயக்க வைக்க முடியும்.

நூற்றுக்கணக்கான பணியாளர்கள்,ஆயிரக்கணக்கான தொழிலாள்கள, அவர்களின் குடும்பங்கள் சமுகம போன்றவற்றின் முன்னேற்றததில் அக்கறையுடன் செயற்படும் இக் கூட்டுறவுச் சங்கத்தை புனரமைத்து இயங்க வைக்க சம்பந்தப்பட்ட சகலரும் முன்வர வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# முஸ்லிம்களின் பிரச்சினையை முன்வைத்து தென்கிழக்குப் பல்கலை மாணவர் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 14 வருடங்கள் நிறைவு பெற்ற போதும், அவர்களது பிரச்சினைகள் தீர்க்கப்படாததை ஆட்சேபித்து தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன்தினம சாலை மறிப்புப் போராட்டமொன்றையும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றினையும் நடத்தியுள்ளனர்.

சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவ, மாணவிகளும் பல்கலைக்கழக சமூகம் சார்ந்தோரும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பேரணியில் கலந்து கொண்டோர் பல கோஷங்களை எழுப்பினர். நேற்றுமுன்தினம் காலை 8.30 மணி முதல் 10 மணிவரை பல்கலைக்கழக ஒலுவில் வளாகம் முன்பாக இடம்பெற்ற மறியற் போராட்டம், ஆர்ப்பாட்டப் பேரணியின் போது இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் ஈடுபட்டிருக்கும் அனைத்துத் தரப்பினரையும் முஸ்லிம் அரசியல் தலைமை களையும் பிரச்சினைகளைத் தீக் குமாறு வலியுறுத்தி கோரிக்கைகள் பிரகடனப் படுத்தப்பட்டன. (ற-10)

# நிர்வாக உறுப்பினர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச செயலகத திற்கு உட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மாதர் அபிவிருத்திச் சங்கங்களுக்கான சம்மேளனம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

சம்மேளனத்தின் தலைவராக இராசேந்திரம் திருக்கருணையும், உப-தலைவராக இநதிராணி தங்கராசாவும், செயலாளராக பேக்மன குணரத்தினமும், உப-செயலாளராக அ.க.ஏனஸ்ற்றும், பொருளாளராக சித்திரலதா சந்திரசேகரமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ற)

# குமுதினிப் படகின் விடுமுறை நாளில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுககுமிடையில் சேவையில் ஈடுபடும் குமுதினி பயணிகள் படகின் விடுமுறை நாள் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம் பிரதி செவ்வாய்க்கிழமை தோறும் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. இம் மாற்றம் நவம்பர் மாதம் 2ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரவுள்ளது.

முன்னர் வியாழககிழமை விடுமுறை நாளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந் தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தையல் போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் தரம் 1 தொடக்கம் 5வரையில் கற்கும் மாணவர்களிடையேயான தையல் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் 500 மாணர்கள் பங்குபற்றவுள்ளனர். (ப-29)

# திருட்டு

(வட்டுக்கோட்டை)

தெல்லிப்பழை வீதி அடைக்கலந தோட்டம் கந்தசுவாமி கோயில் அருகாமையிலுள்ள இரு கடைகளில் கடந்த 28 ஆம் திகதி இரவு வேளை களவாடப்பட்டுள்ளது.

இதில் லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளன. (ப-39,10)

# மின்கம்பம் முறிந்தது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு மருதடிப் பிள்ளையார் ஆலய வாசலில் நடப்பட்டிருந்த மின்கம்பம் அடியோடு முறிந்து வழ்ந்துள்ளது.

இதில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. (ப-29)

# நேரடிப் பேச்சின் அவசியம் குறித்து ஜனாதிபதி அகாசிக்கு விளக்கம்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் விடு



தலைப் புலிகளுக்குமிடையே நேரடியான சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதன் முக்கியத்துவம் குறித்து இலங்கைக்கான ஜப்பானின் விசேட சமாதான தூதுவர் யசூசி அகாசியிடம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விரிவாக விளக்கியுள்ளார்.

இச்சந்திப்பின் போது சமாதானச் செயற்பாடுகளின் தற்போதைய முன்னேற்றங்கள் குறித்தும் அகாசியிடம் ஜனாதிபதி எடுத்துக் கூறியுள்ளார்.

இலங்கைக்கு பொருளாதார உதவிகளை ஜப்பான் வழங்குவது குறித்து தனது நன்றியைத் தெரிவித்துள்ள ஜனாதிபதி,

இலங்கையின் சமாதானத்தை நிலைநாட்டும் விடயத்தில் ஜப்பான் காட்டிவரும் அக்கறை குறித்தும் தனது மகிழ்ச்சியை வெளியிட்டார்.



ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் மாலை இருவருக்குமிடையில் நடைபெற்ற சந்திப் பின் போதே இந்த விடயங்களை அவர் தெரிவித்ததாக ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் நாயகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-121)

# ஆசிரியர்களுக்கிடையே விளையாட்டு போட்டிகளை நடத்த விரிவான ஏற்பாடு

(திருகோணமலை)

அகில இலங்கை ரீதியில் ஆசிரியர்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் பங்கு பற்ற விரும்பும் ஆசிரியர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக உடனடியாக கல்வியமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு அமைச்சின் உடற்கல்வி மற்றும் விளையாட்டுத்துறைக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் எஸ்.கே.ஜயவீர கோரியுள்ளார்.

வயது அடிப்படை[illegible]ரித் தனிக் குழுக்களாகவு[illegible], ஆ[illegible]ரியர் மற்றும் ஆசிரியைகளுக்கு, வெவ்வேறாகவும் இப்போட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளதால் அரசாங்கப் பாடசாலைகள், ஆசிரியர்கள் பயிற்சிக் கலாசாலைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகள் என்பனவற்றில் கற்பிக்கும் சகல ஆசிரியர்களும் இப்போட்டி நிகழ்ச்சிகளில் பங்கு பற்ற முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்படி ஆசிரியர்கள் அஞ்சலோட்டம், நீளம் பாய்தல், குண்டெறிதல், ஈட்டிஎறிதல், உயரம் பாய்தல், பரிதிவட்டம் வீசுதல், கரபந்தாட்டம், வலைப்பந்தாட்டம போன்ற போட்டிகளிலும் பங்கு பற்ற முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-10)

## வழங்கல் கட்டளைகளை பெறுக!

யாழ்.மாவட்ட ப.நோ.கூ. சங்கம் அடுத்த கட்ட உலர் உணவு விநியோகத்திற்காக வழங்கல் கட்டளைகளை யாழ். மாவட்ட செயலக புனர்வாழ்வு, புனரமைப்புப் பகுதியில் நாளை திங்கட்கிழமை முதல் பெற்று, விநியோக நடவடிக்கைகளை ஓரிரு தினங்களில் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்டச் செயலக உதவி திட்டப் பணிப்பாளர் அறியத் தந்துள்ளார். (ற)

# பண்ணை வீதி சேதம் பொது மக்கள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதிக்கான வீதி பண்ணைப் பாலத்தில் இருந்து மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளதால், இதனால் பயணிக்கும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இவ் வீதியைப் புனரமைப்புச் செய்யும்படி தீவுப் பகுதிக்கான அமைப்புக்களும் கிராமிய மட்ட அமைப்புக்களும் வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் உதவி அரசாங்க அதிபர்களிடம் முறையீடு செய்திருந்த போதிலும் எத்தகைய புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இதே சமயம் குறிகட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வரும் குமுதினிப் படகில் மழை காலங்களில் பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்வதில் பல சிரமங்களை பொது மக்கள் அனுபவித்து வருகின்றனர் என்றும் தெரியவந்துள்ளது. (ப-16)

# இன, மத, மொழி பேதங்களின்றி அரச அதிகாரிகள் செயற்பட வேண்டும்

## பிரதமர் மஹிந்த எடுத்துரைப்பு

(கொழும்பு)

அரச அதிகாரிகள் இன, மத, மொழி, அரசியல் பேதமின்றி தமது கடமைகளை



நிறைவேற்றவேண்டுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாத்தறை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல்வாதிகள் எவ்வளவு முயற்சி செய்தாலும் அதிகாரிகளின் ஒத்துழைப்புக்கிடைக்காவிட்டால் அபிவிருத்திப் பணிகள் வெற்றியளிக்காது.

பாராளுமன்ற உறுப்பினர்களும் உள்ளூராட்சி சபைகளில் அங்கம் வகிக்கும் பிரதிநிதிகளும் எந்தவொரு பிரதேசத்துக்கும் முன்னுரிமை வழங்காது, ஒரே சமயத்தில் மாவட்டத்திலுள்ள சகல பிரதேசங்களும் அபிவிருத்தி அடையும் வகையில் சகல பிரதேசங்களுக்கும் சரிசமமாக நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் எனவும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-8)

# நிதியுதவித் திட்டங்களின் மேற்பார்வைக்கென ஜனாதிபதி தலைமையில் விசேடகுழு நியமனம்

(கொழும்பு)

வெளிநாடுகளினால் அபிவிருத்தித் திட்டங்களுக்கு வழங்கப்படும் நிதி உதவிகளை மேற்பார்வை செய்யவென அமைச்சரவையின் முடிவின்படி முழுநேரக் குழுவொன்றை ஜனாதிபதி அமைத்துள்ளார்.

மேற்படி திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு உரிய காலத்தில் இலக்கை அடைவதற்கான நடவடிக்கைகளை இந்தக் குழு மேற்பார்வை செய்யும்.

தற்போது வெளிநாட்டு உதவியாக 5 கோடி அமெரிக்க டொலர் நிதியை இலங்கை அரசு வெளிநாடுகள் மற்றும் நிதிநிறுவனங்கள் ஆகியவற்றில் இருந்து பெற்றுக் கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி தலைமையிலான மேற்படி குழுவின் அமைச்சர் சரத் அமுனுகம உட்படப் பல அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு நிதி உதவிகள உரியமுறையில் பயன்படுத்தப் படவில்லையென அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்த குற்றசசாட்டை அடுத்தே இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது. (ற-8)

# எரிபொருட்களின் விலை உயர்ந்தால் தனியார் பஸ் கட்டணங்கள் அதிகரிக்கும்!

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

எரிபொருட்களின் விலை மீண்டும் அதிகரிக்கப்படக் கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன.

அவ்வாறு எரிபொருட்களின் விலை மீண்டும் அதிகரிக்கப்பட்டால் தனியார் பஸ் கட்டணங்களையும் மேலும் அதிகரிக்க நேரிடும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகக் கடந்த செவ்வாய்க்கிழமை நாரஹேன்பிட்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தகவல் தருகையில்,

தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினால் தனியார் பஸ் கட்டணங்கள் இரு முறை அதிகரிக்கப்பட்டன.

எரிபொருட்களின் விலை மிகவேகமாக அதிகரிக்கப்பட்டமையினாலேயே தனியார் பஸ் கட்டணங்களை அதிகரிக்க நேர்ந்தது.

ஆனால் தற்போது மீண்டும் எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்படலாம் என்று திறைசேரியின் செயலாளர் டாக்டர் பி.பி.ஜயசுந்தர எச்சரிக்கை விடுத்து வருகின்றார்.

அவ்வாறு எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டால் தனியார் பஸ் கட்டணங்களை மீண்டும் அதிகரிக்க வேண்டியேற்படும் என்றார். (க-10)

# விசமிகளால் புதைக்கப்பட்ட மிதிவெடி மீட்கப்பட்டது

## துன்னாலையில் சம்பவம்

(துன்னாலை)

துன்னாலை வேம்படிப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து மிதிவெடி ஒன்று மீட்கப்பட்டு இராணுவக் குண்டு செயலிழக்கும் பிரிவினரால் செயலிழக்கச் செய்யப்பட்டது.

அப்பகுதியில் இருந்த செல்லையா பவளம் என்பவரின் வீட்டில் கடந்த வியாழக்கிழமை இரவு இனம் தெரியாதோரால் மிதிவெடி புதைக்கப்பட்டிருந்தது.

அதனையடுத்து அன்றிரவு ரோந்தில் ஈடுப்பட்ட நெல்லியடிப் பொலிஸாருக்குச் சம்பவம் குறித்து அறிவிக்கப்பட்டது. உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அப்பகுதியைத் தமது பாதுகாப்பின் கீழ் வைத்திருந்தன[illegible].

நேற்று முன்தினம் காலை கண்ணிவெடி அகற்றும் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டு, மிதிவெடி செயலிழக்கம் செய்யப்பட்டது. இச் சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, இப் பகுதியில் கடந்த வருடம் இனந்தெரியாதோரால் வெவ்வேறு இடங்களில் புதைக்கப்பட்ட மிதிவெடிகள வெடித்ததில் க.அரசன் (வயது 50) என்பவர் மரணமானதுடன, வை.வசந்தன் என்பவர் தனது இடது காலை இழந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ச-101)

# அரசியல் அமைப்பை அவமதிப்போருக்கு எதிராகப் போராட்டங்களை நடத்துவோம்

## வஜிர அபயவர்த்தன எம்.பி. எச்சரிக்கை

(கொழும்பு)

தற்போதைய அரசியல் அமைப்பிற்கு எதிராக அரசாங்கமோ அல்லது தனி நபரோ செயற்பட்டால் நாம் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டோம் அவ்வாறு அரசியல் அமைப்பிற்கு எதிராக செயற்படுவோரை எதிர்த்துப் போராட்டங்களை நடத்துவோம்.

இவ்வாறு எச்சரித்துள்ளார், ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜீர அபயவர்த்தன,

காலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து நடாத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவைக் குறைக்குமாறு வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடாத்தி வரும் ஐக்கிய தேசியக் கட்சி நேற்று முன்தினம காலியிலும் ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தொடர்ந்து பேசிய வஜிர அபயவர்த்தன,

நாட்டில் உள்ள சாதாரணப் பொதுமக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கும் அசௌகரியங்களுக்கும் உள்ளாகியுள்ள போதிலும் அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் பல்வேறு சலுகைகளை அனுபவித்து வருகின்றனர்.

போலி வாக்குறிதிகளை மக்களுக்கு வழங்கி ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தற்போது மக்களை ஏமாற்றிவிட்டது.

இதனால் இனியும் ஐக்கிய தேசியக் கட்சி அரசின் இத்தகைய பொறுப்பற்ற நடவடிக்கைகளைக் கண்டு பொறுமையுடன் இருக்காது.

மககளுக்கு அளித்த வாக்குறுதிகளை அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும். இல்லாவிட்டால் ஆட்சியை எம்மிடம் தரவேண்டும் என்றார். (க-61)



ரைட்டா - தப்பா
உமா

# சினிமாச் சிதறல்

## செரீன் நடிக்க மறுப்பு

கிளாமராக நடிக்கத் தயாராக இருக்கும் செரீன் படுகவர்ச்சி காட்ட தயக்கம் காட்டுகிறாராம்.

குணால் ஜோடியாக நடிக்கும் 'காதல் திருடா'வில் இடம்பெற்ற பாடல் காட்சியில் படுகவர்ச்சி காட்டி நடிக்க மறுத்த அவர் யாராவது தன்னை வலுக்கட்டாயப்படுத்தி ஆபாசமாக நடிக்கும்படி சொன்னால் மறுத்துவிடுவேன் என்று கறாராகச் சொல்லிவிட்டாராம்.

இதனால் நாகரிக முறையில் ஆடைக்குறைப்பு செய்து நடித்திருக்கிறாராம் செரீன்.

## ரஜனி மகள்

ரஜினிகாந்த் மகள்
யாவுக்கும், நடிகர் தனுஷுக்கு
மணம் ஏற்பாடு செய்யப்பட்
இதுபற்றி நடிகர் தனுஷ் நிரு
க்கு பேட்டி அளித்தபோது,

கேள்வி:- ரஜினி மகள் ஐஸ்வர்யா
உங்களுக்கும் திருமண நிச்ச
எப்படி?

பதில்:– எங்களுக்குள் காத
வும் இல்லை. பத்திரிகைகளில்
கடி வதந்திகள் வந்துகொண்
தன. இதுபற்றி இரு குடும்பத்
அமர்ந்து பேசினோம். அதில்
தியை உண்மையாக்கிவி
என்ன என்று பேசப்பட்டது. அ
இப்போ நடந்திருக்கிறது. இ
சந்தித்துப் பேசி ஒருவரை

கேள்வி:- ஏற்கனவே நீங்கள் ஐ

பதில்:– இருக்கலாம். ஆனால்
சொன்னால் எதுவும் நடந்துவ

கேள்வி:-இந்தத் திருமணத்தில்

பதில்:– எல்லோருடைய மன

கேள்வி:-உங்கள் வருங்கால ம

பதில்:–மிகவும் எளிமையான

கேள்வி:- உங்கள் அண்ணன்
உங்கள் திருமணம் உடனடியா

பதில்:– 21 அல்லது 22 வயத
படிக்கும்போதே முடிவு செய்
நிச்சயம் ஆகிவிட்டது. என்
வித்தியாசமானவர். ஒருவேள
ருந்தால் அடுத்த வருடம் ே

கேள்வி:- ரஜினி என்ற பெரிய
மட்டுமே தனியாகத் திருமணத்

பதில்:– எல்லோர் சம்மதத்

கேள்வி:- ஐஸ்வர்யா உங்களை

பதில்:–அதனால் என்ன?

கேள்வி:- உங்கள் இருவருக்கு

பதில்:– இன்னும் திருமண நி
திகதி எங்கள் திருமணம் நட

கேள்வி:- திருமணம் ரஜினி ம

பதில்:– இல்லை. திருமணம்
மட்டுமே கலந்துகொள்வார்.

கேள்வி:- ரஜினி மகளை நீங்கள்
என்று நினைக்கிறீர்களா?

பதில்:– அதுபற்றி நான் யோ

கேள்வி:-எல்லாமே திட்டமிட்டுச்

பதில்:– அது என்னுடைய சொ

மாநடிகர் தனுஷ் த
கையாளர்களைச் சந்தித்தார். அ
பற்றிக் கேட்டபோது அவர்கள்

# பிரசாந் நடிக்கும் 'சக்கர'



சத்யராஜ் நடித்த 'அடிதடி' என்ற படத்தை அடுத்து ஷக்தி சிதம்பரம் இயக்கத்தில் சத்யராஜ் நடித்து வரும் 'மகா நடிகன்' ராஜ்கர் இயக்கத்தில் பிரபு – கார்த்திக் இணைந்து நடித்துவரும் 'குஸ்தி' ஆகிய படங்களை சுந்தரி பிலிம்ஸ் சார்பில் பிரமாண்டமான முறையில் தயாரிக்கும் எம். ஞான சுந்தரி அடுத்து தயாரிககும் பிரமாண்டமான படம் சக்கர

இதில் பிரஷாந் கதா நாயகனாக நடிக்க அவரது ஜோடியாக இரண்டு முன்னணி கதாநாயகிகள் நடிக்கின்றனர்.

முக்கிய கரக்டர்களில் வடிவேலு, நாசர் உட்பட பல கலைஞர்கள் நடிக்கின்றனர்.

கார்த்திக்ராஜா இசை அமைக்கிறார். சதீஷ், ஹர்ஷா எடிட்டிங் செய்கின்றனர். தோட்டா தரணி அரங்கம் அமைக்க டி.வி.சசி தயாரிப்பு மேற்பார்வை செய்கிறார். கதை, திரைக்கதை, வசனம் எழுதி சுசிகணேசன் இயக்குகிறார். இவர் இயக்கிய 'விரும்புகிறேன்' 'பைவ் ஸ்டார்' ஆகிய இரண்டு படங்களுக்கும் தமிழக அரசின் சிறந்த இயக்குனர் மற்றும் சிறந்த கதாசிரியர் விருது கிடைத்துள்ளது. 'விரும்புகிறேன்' படத்துக்குப் பிறகு சுசிகணேசன், பிரஷாந் இணைந்து பணிபுரியும் 'சக்கர' படத்தின் படப்பிடிப்பு அடுத்த மாதம் தொடங்குகிறது. அதிரடி அக்ஷனுடன் கூடிய மென்மையான காதல் கதை கொண்ட இப்படத்தில் மாறுபட்ட கெட்டப்பில் நடிக்கிறார் பிரஷாந்.



'கண்ணாடிப் பூக்கள்'
காவேரி




ஆயுதம்
சினேகா

## விஜய் புது ஸ்டைல்



பொங்கலன்று விஜய் நடித்த திருப்பாச்சி வெளியாகிறது. இதுவரை எந்தப் படத்திலும் காட்டியிராத புது ஸ்டைல்களை வெளிப்படுத்தி நடித்துள்ள விஜய், பஞ்ச் டயலாக் சிலவற்றை அதிரடியாகப் பேசுகிறார். படப்பிடிப்பில் இந்த டயலாக்குகளை யாரும் கேட்கக்கூடாது என்பதை மனதில் கொண்டு மெதுவாகப் பேசுகிறார். டப்பிங் சமயத்தில் ஆக்ரோஷமாகப் பேசிவிடலாம் என்று இயக்குனரிடம் கூறியுள்ளாராம் விஜய்.



# அகந்தையால் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி

## தமிழக அரசியல் பற்றி ஒரு பார்வை...


'யானை தன் கையாலேயே மண்ணை அள்ளித் தன் தலையில் போடுவதுபோல' என்ற பழமொழிக்கு உதாரணமாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சுட்டிக்காட்டக்கூடிய நிலை இந்திய அரசியலில் இன்று காணப்படுகிறது.

மாநிலங்களுக்கு மத்திய அரசின் பிரதிநிதிகளாகக் கடமையாற்ற ஆளுநர்களை நியமிப்பதும், அவர்களை இடமாற்றுவதும், பதவி விலகுமாறு கேட்டுக்கொள்வதும் இந்திய அரசியலில் தொன்று தொட்டுக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த நியதி. இது மத்திய அரசின் உரிமையும் கூட. இதனை யாரும் தட்டிக் கேட்கவோ, எதிர்த்து வாதிடவோ முடியாது.



கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில் குரானா தமிழ நாட்டின் ஆளுநராக இருந்தபோது, அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி ஜெயலலிதாவின் தூண்டுதலின் பேரில், ஓர் அரசைக் கலைப்பதற்குமுன் அம்மாநில ஆளுநரின் அறிக்கையைப் பெறவேண்டும் என்ற விதி இருந்தபோதிலும் கூட அதனைப் பொருட்படுத்தாமல் அன்றைய ஆட்சியைக் கலைத்ததை பலரும் கண்டித்தபோதிலும் ஒருவர் கூட அதுபற்றி நீதி மன்றத்தில் முறைப்பாடு செய்யவில்லை. ஆனால் ராஜீவ் காந்தியின் நடைமுறைக்கொவ்வாத நடவடிக்கையால் குரானா தமது பதவியை ராஜிநாமாச் செய்தது வேறுகதை.

தற்போது தமிழகத்தின் ஆளுநராக இருக்கும் ராமமோகன்ராவ், முதல்வர் ஜெயலலிதாவின் அதிதீவிர விசுவாசி. தமிழகத்தில் நடைபெறும் சட்டச் சீர்குலைவு, அராஜக நடவடிக்கை என்பன போன்றவற்றைக் காலத்துக்குக் காலம் மத்திய அரசுக்கு அறிவிக்க வேண்டியது மாநில ஆளுநரின கடமையாக இருந்தபோதிலும், அவர் அதைச் சரியான முறையில் செயற்படுத்துவதில்லை என்ற புகார் நீண்டகாலமாக நிலவிவந்தது.



நள்ளிரவு நேரத்தில், ஊரே உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்த வேளையில், மிகப் பெரிய அரசியல்வாதியும், பல முறை தமிழ்நாட்டின் முதல்வராக இருந்தவரும், தமிழ்நாட்டிலுள்ள மாபெரும கடசியொனறின் தலைவராகவும் இருந்த கருணாநிதியை கிரிமினல் குற்றவாளியைப் போல் கைதுசெய்து, தரதரவென்று இழுத்து இமசைபடுத்தியும், மத்திய அமைச்சர்களான முரசொலி மாறன், ரி.ஆர். பாலு முதலியவர்களை வன்முறையால் தாக்கியும், அட்டகாசம்புரிந்த பொலிஸ் நடவடிக்கை, ஆணித்தரமான ஆதாரங்கள் எதுவுமின்றி சென்னை மாநகர மேயராக இருந்தவரும சட்டமனற உறுப்பினருமான முகஸ்ராலினை மேம்பால ஊழல குற்றசசாட்டின் பேரில் கைது செய்து சிறையில் அடைத்தமை, பரிதி இளம்வழுதி என்ற தி.மு.க பிரமுகரொருவரை பல வழிகளில் இம்சித்து சிறையில் அடைத்தமை போன்ற இன்னோரன்ன சமபவஙகள், பொலிஸாரின் அடாவடித்தனத்தைக் கணடித்து அமைதியான முறையில் ஊர்வலம் நடத்திய தி.மு.க தொண்டர்களை பொலிஸ் அனுசரணையுடன் குண்டர்கள் கோஷ்டி தாக்கியமை, இதில் தற்போதைய திருச்செங்கோடு எம்.பி.யான ராதிகாசெல்வியின் கணவரான வெங்கடேசப் பண்ணையார் அநியாயமாகக் கொலை செய்யப்பட்டமை போன்ற சட்டச் சீரழிவு சம்பவங்கள் பற்றி ஆளுநர் மத்திய அரசுக்கு எவ்வித அறிககையையும் அனுப்பிவைக்கவில்லை. அந்தக் காலத்தில் மத்தியில் ஆடசிபுரிந்த பா.ஜ.க. கூட்டணி அரசும் இதைக் கணடும் காணாதது போல இருந்து விட்டது.

காலம் மாறியது. காஙகிரஸ் தலைமையிலான கூட்டாட்சி மத்தியில் மலர்ந்தது, சில மாநில அளுநர்கள் அரசியல காரணங்களுக்காக மாற்றப் பட்டார்கள். இதை ஆரமபததில பா.ஜ.கட்சி எதிர்த்த போதிலும அந்த எதிர்ப்பு பிசுபிசுத்து விட்டது.

ஆனால் சமீபத்தில் தமழக அளுநர் ராம் மோகனராவை பதவி விலகச்செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுத்ததை முதல்வா ஜெயலலிதாவால் பொறுககமுடியவில்லை. அதனை எதிர்த்து உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார். அந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் அதனைத் தள்ளுபடி செயதது. விட்டுவிடுவாரா ஜெயலலிதா. உடனடியான டில்லி உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்தார். இந்த வழக்கு நிலுவையில் நிற்கும் நிலையில், சமீபத்தில் இப்பிரச்சினை தொடர்பாக மத்திய அமைச்சர் சிவராம் பட்டேலுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். மத்திய அமைச்சரின தொலைபேசிப் பேச்சு முழுவதையும் இரகசியமாகப் பதிவு செய்து அதனை டில்லி உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசின் சார்பில் வாதாடும் வழக்கறிஞர் வேணுகோபாலுவுக்கு அனுப்பிவைத்தார். அவர் அதை நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததுடன் ஊடகங்களுக்கும் அனுப்பி வைத்தார்.

இந்த வழக்கை விசாரித்த டில்லி உச்ச நீதிமன்றமும் வழக்கை தள்ளுபடி செயதது. பிரதமர், அமைச்சர்கள, முதலமைச்சர் ஆகியோர் பதவி ஏற்கும்போது இரகசியக் காப்புப் பிரமாணம் செய்யவேண்டியது கட்டாயமான நிகழ்வு. பிரதமர், அமைச்சர்கள் ஆகியோருடன் பேசுபவர்களின் இரகசியம் பேணப்படவேண்டியது அரசியல் சம்பிரதாயம் மாத்திரமல்ல; சட்டப்படி கட்டாயமும் கூட.

ராமகிருஷ்ண ஹெக்டே கர்நாடக முதல்வராக இருந்த நேரத்தில் இதேபோன்ற பிரசசினையில் சிககி தனது பதவியை இராஜினாமா செய்தது இநதிய அரசியலில் முன்னுதாரணம்.

மத்திய அமைச்சர் ஒருவருடன் தொலைபேசியில் பேசியதைப் பதிவுசெய்து அதனை உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும் பணியை ஒரு முதலமைச்சர் செய்திருப்பது எவராலும் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத ஒரு சம்பவமாகும். அது மாத்திரமல்ல, அந்தப் பதிவுப் பிரதிகள் ஊடகங்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த நிகழ்வு இந்திய அரசியலில் பெரும் பூகம்பத்தையே ஏற்படுத்தியுள்ளது. சகலரும் பரபரப்புடன் பேசும் ஒரு சம்பவமாகிவிட்டது. இனி எந்த ஒரு மத்திய அமைச்சரும் மாநில முதலமைச்சர்களுடன் தொலைபேசியில் பேச முன்வரமாட்டார்கள். மத்திய அமைச்சர்களுடான தொடர்பு இன்றி மாநில முதல்வர்களால் எப்படி ஆட்சி நடத்தமுடியும்? எடுத்ததற்கெல்லாம் மத்திய அரசிடம் கையேந்த வேண்டிய நிலையிலுள்ள மாநில அரசுகளுக்கு ஜெயலலிதாவின் இந்த நடவடிக்கை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அரசியல் அறிந்தோர் அனைவரும் இச் செயலைக் கண்டிககாமலிலலை.

ஆளுநர் பதவி விலகல தொடர்பாக எந்த ஒரு முதலமைச்சரும் நீதிமன்றம் சென்றதாக இந்திய அரசியலில் வரலாறு இல்லை. ஏற்கனவே மத்திய அரசுடன் நல்லுறவை ஏற்படுத்திக்கொள்ளாமல் இருந்த ஜெயலலிதா இந்த அரசியல் நெருக்கடியை எவ்விதம் எதிர்கொள்ளப்போகிறார் என அனைவரும் எதிர்பார்த்த வண்ணமே இருக்கிறார்கள்.

ஏலவே, தமிழக அரசைக் கலைக்கவேண்டும் என்ற குரல் தமிழ்நாட்டில் பரவலாக எழுந்துள்ள நிலையில் இந்தச் செயலொன்றே அரசைக் கலைபபதற்குப் போதுமானது என அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்.

என்ன நடக்கப்போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

**சிபி**

* * *

---

**அமெரிக்காவின் முக்கிய மையங்கள் மீது**

# தாக்குதல்களை நடத்தப்போவதாக ஒஸாமாபின்லேடன் பகிரங்க எச்சரிக்கை

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் முக்கிய ஸ்தலங்களின் மீது மீண்டும் பயஙகரவாதத் தாக்குதல்களை நடத்தப்போவதாக சர்வதேச பயங்கரவாதி ஒஸாமாபின்லேடன் பகிரங்கமான எச்சரிக்கை விடுத்துள்ளார்.

முஸ்லிம் மக்களின் இறைமைகளைப் பாதிக்கும் விதமாக அமெரிக்காவால் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே இத்தாக்குதல்களை நடத்தப்போவதாக ஒஸாமா பின்லேடன் எச்சரித்துள்ளார்.

எதிர்வரும் 2ஆம் திகதி உலகின் அரசியலில் பாரிய மாற்றங்கள் உருவாக்கக்கூடிய தீர்வை தரப்போகும் அமெரிக்காவின் அதிபர் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அல்-கெய்டா அமைப்பின் தலைவரான ஒஸாமா பின்லேடன் விடுவித்துள்ள இவ் எச்சரிக்கை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



இவ் அறிவித்தலை நேற்று முன்தினம் இரவு அல் - யசீரா தொலைக் காட்சிசேவை அறிவிததிருப்பதைத் தொடர்ந்து அமெரிககாவின் முக்கிய நகரங்கள் மற்றும் அலுவலகங்கள் என்பவற்றில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருப்பதுடன் அமெரிக்காவின் துறைமுகம் மற்றும், விமான நிலையங்களிலும் சோதனை நடைமுறைகள் மிகவும் இறுக்கமாக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பொதுமககள் காரணமின்றி முக்கிய நகரங்களில் நடமாடுவதைத் தவிர்க்குமாறும் அமெரிக்க அரசு பகிரங்கமாகக் கோரியுள்ளது.

அமெரிக்காவில் இடம்பெறவுள்ள அதிபர் தேர்தலுக்காக முக்கிய அரசியல் பிரமுகர்கள் கூடும் இடங்களை இலக்குவைத்தே இத்தாக்குதல் இடம்பெறலாம் என சந்தேகம் எழுந்துள்ளதால் அரசியல் பிரமுகர்களுக்கான பாதுகாப்பும் பலப்படுத்தபட்டிருக்கிறது.

இதேவேளை, தீவிரவாதத்தை ஒழித்துக்கட்டுவதில் அமெரிக்க அதிபர் புஷ் மேற்கொண்டு வரும தீவிர முயற்சிகளின் பயனாகவே இத்தாக்குதல் பீதி தோன்றியிருப்பதனால் தற்போதைய அதிபர் புஷ்ஷிற்கு அது பாதகமான முடிவைத்தரும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (ப)

---

**ஈராக்கில் கடத்தப்பட்ட ஜப்பானிய பிரஜை கொலை**

ஈராக்கிய தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட ஜப்பானிய பிரஜை கொலை செய்யப்பட்டிருப்பதாக அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படைகளுக்கு ஆதரவாக அங்கு பணியில் ஈடுபட்டுள்ள ஜப்பானியப் படைகள் வாபஸ் பெறப்பட வேண்டும் எனக் கோரி ஜப்பானிய பிரஜை ஒருவரைக் கடத்திச் சென்ற ஈராக் தீவிரவாதிகள் படைகளை ஜப்பான் வாபஸ்பொறவிட் டால் அவரைக் கொல்லப்போவதாகவும் காலக்கெடு விதித்திருந்தனர்.

இவ்வாறு விதிக்கப்பட்ட காலக்கெடு நேற்றுமுன்தினத்துடன் முடிவடைந்ததைத் தொடர்ந்தே நேற்று அவர் கொல்லப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. (ப)

# கூடிவாழ்ந்தால் கோடி நன்மை தனிமரம் என்றும் தோப்பாகாது

மனிதர்கள் சேர்ந்து கூட்டாக வாழவேண்டும். மிருகங்கள் - பறவைகள் ஒன்றாகக்



கூட்டு வாழ்க்கையைத் தான் மேற்கொள்கின்றன. இந்தக் கூட்டுவாழ்கையின் தனித்தன்மை என்னவெனின், ஒருவர் சோர்ந்து போகின்றபோது அடுத்தவர் ஆறுதல் அளிக்க முடியும். மகிழ்ந்திருக்கும் போது அந்த மகிழ்வினைப் பகிர்ந்து கொள்ள முடியும்.

குழுமத்தின் அல்லது கூட்டு வாழ்க்கையை வெறுப்பவர்கள் தனி மரமாக, நடைப்பிணம் போல் தான் காணப்படுவார்கள். அத்துடன் மனதில் ஒரு இறுக்கத்தன்மை கொண்டிப்பதை அவதானிக்கலாம்.

அநேகர் நினைக்கலாம் வாழ்வுக்குப் பணம் தானே முக்கியம். பணம் என்னிடம் இருக்கின்றது. ஆகையினால் மற்றவர்களின் உதவி எனக்குத் தேவையில்லை என்று, இது கூட ஒரு குறுகிய வறட்டுச் சிந்தனையே.

வெளிநாட்டு சம்பாத்தியம் எமது சமூகத்தினை ஆட்கொண்டு, இந்தக் கூட்டு உழைப்பினை - குழுமவாழ்வை சீர்குலைத்து விட்டது.

அநேக குடும்பத்துப் பிள்ளைகள் வெளிநாட்டில் இருந்து உழைக்கின்றார்கள். இங்கு வயோதிபப் பெற்றோர் மட்டுமே இருக்கின்றார்கள். இவர்கள் நினைக்கின்றார்கள் தமக்குப் பிள்ளைகள் நிறையப் பணம் அனுப்புகின்றார்கள் தானே. எமக்கு என்ன குறை யென்று.

இங்கு அவர்களின் சிந்தனை தவறிப்போகின்றது. அதாவது கடையில் பொருட்களைக் காசு கொடுத்து வாங்கமுடியும். பொருட்கள் வேண்டுமென்று விதவிதமாக எந்தனையோ வாங்கிக் குவிக்கலாம். இதனை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால் மகிழ்வை மற்றவர் உறவைப் பணம் கொடுத்து வாங்க முடியுமா? என்பதைச் சிந்திக்க மறுக்கின்றார்கள்.

முதுமையில் இருக்கும் பெற்றோர் தமது பிள்ளைகளை பிரிந்த நிலையில் அயலவர்களுடன் மற்றும் உறவுகளுடன் அன்பாக பரிவுடன் நடந்து கொள்ள மறந்து இறுதியில், அவர்கள் வீட்டுக்கே யாரும் செல்லாமல் இருப்பதை காணலாம். இதனால் அவர்களை தனிமைவாட்ட ஆறுதல் சொல்ல யாருமின்றி மன உளைச்சலினால் பாதிக்கப்பட்டு மகிழ்வாக இறுதிக்காலத்தைக் கழிக்க வேண்டியவர்கள், சோகமாக மிகவும் பரிதாபகரமாக கழிப்பதைக் காணலாம்.

## பரமபிதாகாட்டியபாதை

"தனி மனிதராய் இருப்பதை விட இருவராய் இருப்பது மேல் ஏனெனில் அவர்கள் சேர்ந்து உழைப்பதால் அவர்களுக்கு மிகுந்த பயன் கிடைக்கும். ஒருவர் விழுந்தால் அடுத்தவர் அவரைத் தூக்கிவிடுவார். தனி மனிதராய் இருப்பவர் விழுந்தால் அவரது நிலைமை வருந்தத்தக்கதாகும் ஏனெனில் அவரைத் தூக்கிவிட எவருமில்லை"

(சபை உரையாளர் 4:9-10)

இததகைய விவிலிய வாக்கு கூட்டு வாழ்க்கையின் முக்கியத்துவத்தை அறிவுறுத்துகின்றது.

பணம் நிறைய இருந்தாலும் மன அமைதி வேண்டும். இந்த மன அமைதியை நிறைவான கூட்டுவாழ்க்கைதான் தரும். பணக்காரன் தனிமையில் வாழ்வை கழிக்கின்றான். ஆனல் சாதாரண ஏழை தனது வாழ்நாளை மிகவும் மகிழ்வாகவும் நிம்மதியுடனும் கழிக்கின்றான ஏனெனில் அவன் கூட்டாக குடும்பத்துடன் அயலவர்களுடன் வாழ்வதினால் ஒருவருக்கு ஒருவர் உதவியாக ஆறுதல்படுத்துபவராக இருப்பதினால் ஆகும்.

**"காற்றைப் பிடிக்க முயல்வது போன்ற பயனற்ற உழைப்பு இரு கைநிறைய இருப்பதை விட மன அமைதி ஒரு கையளவு இருப்பதே மேல"**

(சபை உரையாளர் 4:6)

ஆகவே உறவுகளை வெறுக்காது இருப்பது என்றும் பயன் மிக்கது. மனிதன் ஒரே நிலைப்பாட்டில் என்றும் இருப்பதில்லை. ஒரு நேரம் மகிழ்வாக இருப்பான், இந்த மகிழ்வைக் கூட மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள உறவு - நண்பர்கள் - குடும்பம் தேவையானது. துக்கம் கூட திடீரென ஏற்படும். இந்தத் துக்கத்தில் இருந்து மீண்டும் ஆறுதல் அடைவதற்கு மற்றவர்களின் ஆறுதல் மொழிகள் தேவை. அத்துன்பத்தில் இருந்து விலக அறிவுரைகள் தேவை.

வாழ்தகவுடன் இருக்கும் விதைக்கு ஈரப்பதன் - வெப்பம் - வளி - நீர் என்பன கிடைக்கின்ற போது, அது முளைத்துப் பலன் கொடுக்கின்றது. அதைப்போல எமக்கு மற்றவர்களின் அன்பும் - பரிவும் கிடைக்கின்ற போதே எம்மால் நிறைவாக - மகிழ்வாக வாழ்வை முன்னெடுக்க முடியும். □

**வி.பி.தனா**

## விண்ணப்பிக்கலாம்

(சாவகச்சேரி)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வெற்றிடமாகவுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர் வகுப்பு II 'ஆ' பதவிக்கு ஆட்சேப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாணத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டிருப்பதுடன், விண்ணப்பதாரிகள் தேசிய தொழில் நுட்பவியல் டிப்ளோமா, தேசிய பொறியியல் டிப்ளோமா, தொழில் நுட்பவியல் டிப்ளோமா ஆகிய பரீட்சைகளில் சித்தி பெற்றிருந்தல் வேண்டும்.

விண்ணப்பிப்போர் பரீட்சை ஒன்றின மூலம் தெரிவு செய்யப்படுவர். இது பொது உளச்சார்பு, பொது அறிவு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி அடுத்தமாதம் முதலாம் திகதியாகும்.

(ப-127,10)

## மாதாந்த இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தினால் நடாத்தப்படும் மாதாந்த இசை நிகழ்ச்சி, இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00மணிக்கு ஆதீனக் கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் உப அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

(ற-10)

## வீடுகள் சேதமடைந்த ஆசிரியர்களின் விபரங்கள் திரட்டப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

கடநத கால யுத்த நடவடிக்கைகளினால் தமது சொந்த வீடுகளை இழந்தோ, அல்லது வீடுகள் சேதமடைந்தோ உள்ள ஆசிரியர்களின் விபரங்கள் இலங்கை ஆசிரியர் சங்கத்தால திரட்டப்படுகின்றன.

இவ் ஆசிரியர்களின் பிரச்சினைகள் குறித்து கல்வி அமைச்சின் செயலாளர்கள் கலாநிதி தாரா டிமெல் உடன் கடந்த 6 ஆம் திகதி இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் பேர்ட்டி.பி. இரணவீரகே தலைமையிலான கல்விச் சேவை ஊழியர்களின் தொழிற் சங்கக் கூட்டமைப்பு நடாத்திய பேச்சுவார்த்தையின் போது விரிவாக விளக்கிக் கூறப்பட்டது.

அத்துடன், இச் சந்திப்பின் போது, இவ்வாறு வீடுகள் பாதிப்படைந்த ஆசிரியர்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்து நஷ்டஈடு பெறும் வரை அவர்களுக்குரிய வாடகையை வழங்குமாறும் கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இவ்விடயம் குறித்து முதன் முதலாகத் தற்போது தான் அறிந்துள்ளதாகவும், இவ்வாறு பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் விபரங்களை அறியத்தந்தால் இது விடயத்தை கல்வி அமைச்சு மூலம் அமைச்சரவைக்கு சமர்ப்பித்து உரிய நடவடிக்கைகளை எடுப்பதாகவும் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டிமெல் உறுதியளித்தார்.

இதற்கமைய, இவ் விபரங்களைத் திரட்டும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எனவே, இதற்கான விண்ணப்பப்படிவங்களை யாழ்.மாவட்ட ஆசிரியர்கள் காங்கேசன்துறை வீதி, கொக்குவிலில் உள்ள இலங்கை ஆசிரியர் சங்க அலுவலகத்தில் நாளை ஞாயிற்றுகிழமை தொடக்கம் பிற்பகல் 3.00 மணிமுதல் 6.00 மணி வரை பெற்று பூர்த்தி செய்த விண்ணப்பங்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன், எதிர்வரும் நவம்பர் மாதம் 2 ஆம் திகதி முதல் யாழ்.மாவட்டத்தின் ஏனைய வலயச் செயலாளர்களிடமும் இப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஏனைய மாவட்ட ஆசிரியர்கள் நவம்பர் மாதம் 8 ஆம் திகதி முதல் இவ் விண்ணப்பப் படிவங்களை பெறுவதற்கான ஒழுங்குகள் பின்னர் அறிவிக்கப்படு எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## சமஷ்டி முறைகுறித்த கருத்தாடல் நிகழ்வு

(திருநெல்வேலி)

ஜனநாயகம் மற்றும் சிறுபான்மை இனங்களின் உரிமைகளுக்கான கூட்டு அமைப்பு நேற்று முன்தினம் காலை வை.எம்.சி.ஏ மண்டபத்தில் "சமஷ்டி முறை" பற்றிய கருத்தாடல் நிகழ்வொன்றை நடாத்தியது.

ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த மேற்படி அமைப்பின் தலைவர் பவுல சங்காட் இவ் அமைப்பின் இலங்கைக்கான இணைப்பாளர் றஞ்சித் கேனநாயக்க மற்றும் "பவ்ரல" அமைப்புப் பிரதிநிதிகள் இந்தக் கருதாடலை நிகழ்த்தினர்.

சுமார் இரு மணிநேரம் இடம்பெற்ற இக்கருத்தாடலில், இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சமஷ்டி முறை பயன்படுமா என்பது குறித்தும், இது குறித்து சமூகத்தின் கீழ் மட்டத்தில் இருந்தும் கல்வி அறிவுடைய மட்டம் வரையும் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன.

இதில் பவ்ரல் அமைப்பின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் நிர்மானுஜன், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட அலுவலக இணைப்பாளர் றுவான் சந்திரசேகர, யாழ்.மாவட்டப் பொது அமைப்புப் பிரதிநிதிகள் மற்றும் யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கப் பிரதிநிதிகளாகியோர் கலந்து கொண்டனர். (ற-19,43)

## புத்தசாசன ஆ.கு வின் செயலமர்வுக்கு அழைக்காமைக்கு ஹெல உறுமய கண்டனம்

(கொழும்பு)

புத்தசாசன ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அறிமுகப்படுத்தும் செயலமர்விற்கு ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான தேரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படாமைக்குக் கண்டனம் தெரிவிப்பதாக ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், கட்சியின் பிரதித் தலைவருமான ஓமல்பே சோபித தேரர் கூறியுள்ளார்.

கொழும்பில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாகப் பொது மக்கள் மத்தியில் ஒரு நிலைப்பாட்டை ஏற்படுத்துவதற்காகத் தேரர்களும், பல்வேறு பௌத்த அமைப்புக்களும் முன்வந்துள்ளன.

இருப்பினும், ஜாதிக ஹெல உறுமய கட்சி என்ற அடிப்படையில் எந்தளவிற்கு மக்கள் மத்தியில் தெளிவான ஒரு நிலைப்பாட்டை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தோம் என்பதனை அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

இந்த நிலைப்பாட்டை முன் கொண்டு வந்து மக்களின் வாக்குகள் மூலம் பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட 9 தேரர்களும் அந்த விடயம் தொடர்பாகவே தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றனர்.

எங்கள் உறுப்பினர்களில் ஒருவருக்கும் இந்த விடயம் தொடர்பான செயல் அமர்வுக்கு அழைப்பு விடிவிக்கப்படவில்லை என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ற-8)

## இப்படியும் திருடர்கள் உள்ளனர் பொதுமக்களே கவனம் !

(சண்டிலிப்பாய்)

தட்டார்தெரு சந்தியில் உள்ள வீடொன்றிற்குக் காலை 7.30 மணியளவில் வந்த ஒரு நபர், அவ் வீட்டுக்காரியிடம் கோழிக்கூடும், நாய்க்கூடும் திருத்த வரும் படி உங்களுடைய கணவன் கூறினார் என்று கூறினார்.

இதை நம்பி அவ் வீட்டுக்காரி கோழிக்கூடு மற்றும் நாய் கூடுகளைத் திருத்துவ்தற்கான பொருட்களை வாங்குவதற்காக ஆயிரம் ரூபா பணத்தினை கொடுத்து அனுப்பினார்.

அவ்வாறு ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்றுச் சென்ற நபர் மீளத் திரும்பாமல் அப்படியே தலைமறைவாகிவிட்டார்.

இவரைப் பல இடங்களில் தேடிய போதும் கண்டு பிடிக்க முடியவில்லை.

இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் தொடர்ந்தும் யாழ். குடாநாட்டின் பல இடங்களிலும் இடம்பெறுகின்றன.

எனவே, இவ்வாறான திருடர்கள் உங்கள் வீடுகளுக்கும் வரக் கூடும் கவனமாக இருங்கள்.(க-22,10)

## ஈழ அகதிகள் ஐவர் தாயகம் திரும்பினர்

தமிழக அகதி முகாம்களிலிருந்து ஈழ அகதிகள் ஐவர் மன்னாரை வந்தடைந்துள்ளனர்.

புதுக்கோட்டை, திருச்சிஆகிய அகதி முகாம்களிலிருந்தே கடந்த வியாழக்கிழமை இந்த அகதிகள் தாயகம் திரும்பியுள்ளனர்.

இவர்கள் தமது பதிவுகளை பொலிஸில் மேற்கொண்டபின், தத்தமது சொந்த இடங்களான நானாட்டான், மடுக்கரை, தாண்டிக்குளம், வவுனியா ஆகிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ற-8)

# ஜினி மகளை மணப்பேன் – தனுஷ்



ரஜினிகாந்த் மகள் ஐஸ்வர் கும், நடிகர் தனுஷுக்கும் திரு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. றி நடிகர் தனுஷ் நிருபர்களு பேட்டி அளித்தபோது,

:- ரஜினி மகள் ஐஸ்வர்யாவுக்கும். நக்கும் ருமண நிச்சயமானது ?

:– எங்களுக்குள் காதல் எது இல்லை. பத்திரிகைகளில் அடிக் தந்திகள் வந்துகொண்டிருந் இதுபற்றி இரு குடும்பத்தினரும் ந்து பேசினோம். அதில் வதந் உண்மையாக்கிவிட்டால் என்று பேசப்பட்டது. அதுதான் பா நடந்திருக்கிறது. இரு வீட்டார் சம்மதம் தெரிவித்ததும் நானும் ஐஸ்வர்யாவும் ஒருமுறை த்துப் பேசி ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டோம்.

வி:- ஏற்கனவே நீங்கள் ஐஸ்வர்யாவை சந்தித்திருக்கிறீர்கள் அல்லவா?
:– இருக்கலாம். ஆனால் இது காதல் திருமணம் அல்ல. நாங்கள் இருவரும் காதலித்தோம் என்று ன்னால் எதுவும் நடந்துவிடாது. ஆனால் அது உண்மை அல்ல.

வி:-இந்தத் திருமணத்தில் ரஜினிக்கு உடன்பாடு இல்லை என்று கூறப்படுகிறதே?
:– எல்லோருடைய மனப்பூர்வமான சம்மதத்துடன்தான் எங்கள் திருமணம் நடக்கிறது.

வி:-உங்கள் வருங்கால மாமனாரை பற்றிக் கூறுங்களேன்?
:–மிகவும் எளிமையான மனிதர்.

வி:- உங்கள் அண்ணன் செல்வராகவனுக்கு திருமணம் ஆகாமல் இருக்கும்போது இளையவரான ள் திருமணம் உடனடியாக நடப்பது ஏன்?
:– 21 அல்லது 22 வயதில் நான் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று பிளஸ்1, பிளஸ்2 கும்போதே முடிவு செய்துவிட்டேன். அந்த வயது வந்து விட்டது. அதனால் எனது திருமணம் சயம் ஆகிவிட்டது. என்னுடைய அண்ணனுக்கும் இதில் பூரண சம்மதம் உண்டு. அவர் தியாசமானவர். ஒருவேளை எனக்கு ஐஸ்வர்யாவுடன் திருமணம் நிச்சயம் ஆகாமல் இருந்தி நால் அடுத்த வருடம் வேறு பெண்ணையாவது தேர்ந்தெடுத்து மணந்து கொண்டிருப்பேன்.

வி:- ரஜினி என்ற பெரிய நடிகரின் மகளுடன் உங்கள் திருமணம் நடக்க உள்ளது. ஆனால் நீங்கள் மே தனியாகத் திருமணத்தை அறிவிக்க வந்திருப்பது ஏன்?
:– எல்லோர் சம்மதத்தின் பேரில்தான் நான் அறிவிக்க வந்திருக்கிறேன்.

வி:- ஐஸ்வர்யா உங்களை விட அதிகம் படித்தவர். உங்களைவிட வயதில் மூத்தவராமே?
:– அதனால் என்ன?

வி:- உங்கள் இருவருக்கும் திருமண நிச்சயதார்த்தம் எப்போது நடந்தது?
:– இன்னும் திருமண நிச்சயதார்த்தம் நடக்கவில்லை. ஆனால் வருகிற நவம்பர் மாதம் 18ஆம் தி எங்கள் திருமணம் நடக்கிறது.

வி:- திருமனம் ரஜினி மண்டபத்தில் நடக்கிறதா?
ல்:– இல்லை. திருமணம் எளிமையாக நடக்க உள்ளது. அதில் எங்கள் இரண்டு குடும்பத்தினர் ருமே கலந்துகொள்வார்கள்.

வி:- ரஜினி மகளை நீங்கள் மணந்துகொள்வதால் ரஜினியின் ரசிகர்களை உங்கள் பக்கம் ஈர்த்துவிடலாம் நினைக்கிறீர்களா?
ல்:– அதுபற்றி நான் யோசிக்கவில்லை.

வி:-எல்லாமே திட்டமிட்டுச் செய்யும் நீங்கள் உங்கள் தேனிலவை எங்கு நடத்த உள்ளீர்கள்?
ல்:– அது என்னுடைய சொந்த விஷயம். அதுபற்றி இப்போது எதுவும் சொல்ல முடியாது.

நடிகர் னுஷ் தனது திருமணம் பற்றி அறிவித்தபோது அவர் மட்டுமே தனியாகப் பத்திரி பாளர்களைச் சந்தித்தார். அவருடன் பெற்றோர்கள் வரவில்லை. ரஜினி தரப்பிலும் இந்தத் திருமணம் இக் கேட்டபோது அவர்கள் மறுப்பு எதுவும் சொல்லவில்லை.




# 7ஜி ரெயின்போ காலனி
## திரைவிமர்சனம்

'காதல்.. காதல்.. காதல்.. காதல் போயின்...' என்ற மகா கவியின் வரிகளைத் தட்டியெடுத்து சொல்லப்பட்டிருப்பதுதான் கதை.

நல்ல குடும்பத்தைச் சேர்ந்த கதிர் (ரவிகிருஷ்ணா) பொறுக் கித்தனம் செய்பவன். இவன் வசிக்கும் ரெயின்போ காலணியில் 7ஜி என்ற நம்பருக்கு குடி வருபவர் ஜெயின் குடும்பத்தை சேர்ந்த அனிதா (சோனியா அகர்வால்). இதுவரை காதலில் விழாத கதிர் அனிதாமீது காதல் கொள்கிறான். ஆனால் அனிதா அவனை வெறுக்கிறாள். ஆனா லும் விடாமல் பின்தொடர அனிதா கதிரை செருப்பால் அடித்துக் கூட அவமானப்படுத்துகிறாள்.

உன் ரேஞ்சுக்கு வேறு ஒரு பெண்ணைப் பார்த்து காதலித்து திருமணம் செய்து கொள் என்று அனிதா கூறினாலும் விடாத கதிர் 'ஐ லவ் யூ' சொல்ல ஒரு கட்டத்தில் அனிதா கதிர் மீது பரிவுபட்டு காதலை ஏற்றுக் கொள்கிறார் பின்னர் கதிரிடம் உள்ள மெக்கானிக் தொழில் திறமையை வெளிக் கொண்டுவர மோட்டார் கம்பெனியில்




வேலைக்கு சேர்த்துவிட அதன் பின்னர் பொறுப்பு உள்ளவனாக கதிர் மாற, அனிதா வீட்டில் காதலுக்கு எதிர்ப்பு வளர்கிறது.

திடீரென்று காதலி மரணித்துவிட... காதலன் என்ன செய் கிறான் என்ற 'ஆயிரம் வாட்ஸ்' கேள்விக்கு அற்புதமான பதில் சொல் லியிருக்கின்றார் இயக்குநர் செல்வராகவன்.

தண்ணியடிப்பதையும், சிகரெட் பிடிப்பதையும் பெண்களுடன் ஊர் சுற்றுவதையும், படிப்பில் கோட்டை விடுவதையும் இதற்கு மேல் யாராலும் நியாயப்படுத்தவே முடியாது. அப்படியொரு அற்புதமான காட்சிகள் படம் முழுக்க வியாபித்திருக்கிறது.

சோனியா அகர்வாலை துரத்தித் துரத்தி காதலிப்பது, உரசு வது, பஸ்ஸில் சில்மிஷம் செய்து செருப்படி வாங்குவதில் புதிய பார்வை புதுமுகம் ரவிகிருஷ்ணா நடிப்பில் பாஸ் மார்க் வாங்கிவிட்டார். அனிதா வாக சோனியா அகர்வாலின் நடிப்பில் நிறைவு.

ரவிகிருஷ்ணாவின் நண்பர்களின் சேட்டைகள் ரசிக்க வைக்கிறது. சுமன்ஷெட்டியின் காமெடி கலகலப்பை ஏற்படுத்துகிறது. காலை



5மணிக்கு மொட்டை மாடிக்கு வருகிறேன் என்று சோனியா அகர்வால் ரவிகிருஷ்ணாவிடம் சொல்ல மொட்டை மாடியில் அலாரம் வைத்து, அடிக்கடி சுமன்ஷெட்டியை தூக்கத்தில் எழுப்புவதும், சுமன்ஷெட்டி ஓவென்று அழும் போது, நிம்மதியா தூங்கலாம் என்று தூங்கும் போது மழை வருவதும் நல்ல தமாஷ்.

காதலர்கள் வாழ்க்கையில் ஒன்றுசேர முடியா மல் போவதும் ஒரு நிமிஷமாவது மனைவியாக வாழவேண்டும் என்று சோனியா அகர்வால் ரவிகிருஷ்ணாவிடம் சொல்லி தனது உடம்பைக் கொடுக்கும் போது 'காதலுக்கு மரியாதை' என்று சொல்லுவதா? அல்லது எந்தக் கலாசாரம் என்று சொல்லுவதோ தெரியவில்லை?

மனோரம்மா, விஜயன், சுதா, ரவிக்குமார் ஆகியோர் சிறப்பாக நடித்திருக்கிறார்கள். யுவன்சங்கர் ராஜா இசையில் பாடல்கள் ரசிக்க வைக்கிறது. குறிப்பாக 'ஜனவரி மாதம்', 'நாம் வயதுக்கு' பாடல் களைக் கேட்கலாம்.

அரவிந்த் கிருஷ்ணாவின் ஒளிப்பதிவில் ஏ.எம். ரத்தினம் தயாரி ப்பில் செல்வராகவன் இயக்கத்தில் உருவாகியுள்ள '7ஜி ரெயின்போ காலணி'யில் விரசம் அதிகம். பிற்பகுதி படம் இயல்பாக உள்ளதாலும் கொஞ் சம் சறுக்கல் ஏற்படுகிறது.

செல்வராகவன் படத்தைப் பற்றி பிரச்சனை ஏற்படும் வகையில் உருவாகியிருப்பதால் ஒரு எதிர்ப்பை உண்டாக்கிவிடுகிறது.

இளைஞர்களைக் குறிவைக்கும் படம்.

# மீள்பார்வை

# ஈழத் தமிழர் இறைமை

அத்தியாயம்-2 தொடர்

மு. திருச்செல்வம்

பழங்குடி மக்களாக மக்கள் தொகையில் பெரும்பான்மையினராக உள்ள காப்பிலி இனக் கறுப்புநிற மக்கள் ஆளப்படும் இனமாக, அடக்கப்படும் இனமாக, அறிவற்ற இனமாக, நாகரீகம் அற்ற இனமாகக் கருதப்பட்டனர். 1965இல் ரொடீஷியாவில் 3,970,000 காப்பிலிகள் 217,000 வெள்ளையர்கள் 20,000 ஆசியரும் பிருகுமாக மொத்தம் 4,207,300 மக்கள் வாழ்ந்தனர்.

ஏனைய நாடுகளுக்கு விடுதலை வழங்கி வந்த பிரிட்டன் ரொடீஷியாவிற்கும் விடுதலை வழங்க முயற்சித்தது. பழங்குடி மக்களாக காப்பிலி இனமக்கள் தங்களிடம் ஆட்சிப் பொறுப்பையும் ஆட்சியுரிமையையும் இறைமையையும் மீளத்தருமாறு போராடினார்கள். ஆட்சித்துறை அனைத்திலும் அமர்ந்திருந்த வெள்ளையர்கள் இதற்கு ஒப்பில்லை. பழங்குடி மக்களாக காப்பிலிகளிடம் ஆட்சி கொடுக்கப்பட்டால் இறைமை மீளளிக்கப்பட்டால் வெள்ளையர்களின் நலம் பாதிக்கப்படும். வெள்ளையர்கள் அனுபவித்த முன்னுரிமைகள் குறைக்கப்பட்டு விடும் என அஞ்சினார்கள்.

1965 நவம்பர் 11 ஆம் நாள் ரொடீஷிய வெள்ளையர்கள் ஒரு தலைப்பட்சமாக நாட்டின் விடுதலையை அறிவித்தனர். பிரிட்டிஷார் 1961 இல் அந்நாட்டுக்கு வழங்கிய அரசியலமைப்பைத் தூக்கி எறிந்தனர். விடுதலைப் பிரகடனத்துடன் புதியதோர் அரசியலமைப்பை அறிவித்தனர். விடுதலைப் பிரகடனத்தின் தொடக்க வரிகளில் ரொடீஷியா மேற்கொண்ட நடவடிக்கையின் கருப்பொருள் கூறப்பட்டுள்ளது.

'ஒரு நாட்டு மக்கள் வேறு ஒரு நாட்டு மக்களுடன் கொண்டுள்ள அரசியல் பிணைப்புக்களை மாற்றியமைத்து ஏனைய நாடுகளைப் போல தனியான ஒத்த தகுதி நிலை உடைய நாடாக உரித்துடன் தம்மை ஆக்கிக்கொள்ள வேண்டியேற்படும் என மனித சமுதாயத்தின் வரலாறு காட்டியுள்ளமையால் ... இந்த அறிவித்தல் மூலம், இத்துடன் இணைந்துள்ள அரசியலமைப்பைத தமதாக ஏற்று சட்டமாக்கி, ரொடீஷிய மக்களுக்கு வழங்கி...'

ஓர் அறிவித்தல் மூலம், ஒரு சாற்றுதல் மூலம், 'இத்தால் யாவரும் அறிக' என அறிக்கை வெளியிட்டு, நாட்டுக்கு விடுதலை பெற்ற முறைமைதான் ரொடீஷியாவில் நடந்த ஒரு தலைப்பட்சமான விடுதலை அறிவிப்பு.

இந்த விடுதலை அறிவிப்புத்தான், தமதாக ஏற்று சட்டமாக்கி மக்களுக்கு வழங்கப்பட்ட அரசியலமைப்பிற்குரிய வலிமையைக் கொடுத்தது. ஏற்கனவே பிரிட்டனால் வழங்ககப்பட்ட அரசியலமைப்பிற்கு முரணாகப் புறம்பாக, இந்த அரசியலமைப்பு எழுந்தது. எனவே இந்த அரசியலமைப்புச் சட்டத் தொடர்புடைய அரசியலமைப்பு அல்ல. அரசியல் எழுச்சியால் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பு ஆகும். ரொடீஷியாவில் நடைபெற்ற ஒரு தலைப்பட்சமான நடவடிக்கையை, அங்குள்ள வெள்ளையர்களின் தலைவர்கள் மட்டுமே மேற்கொண்டார்கள். இந்த நடவடிககையை நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் பங்குகொள்ளவில்லை. நாட்டின் மக்கள் தொகையில்பெரும்பான்மையாக உள்ள பழங்குடி மக்கள் முற்றாக இதில்பங்கு கொள்ளவில்லை.

இந்த புதிய அரசியலமைப்பு சட்டபூர்வமானதா? இந்தக் கேள்வி, ரொடீஷிய உயர் நீதிமன்றத்தில் கேட்கப்பட்டது. பட்டசிம்பமுட்டோ எ. லார்ட்டர் பேர்க்கு வழக்கில், இந்தச் சிக்கல் ரொடீஷிய நீதிமன்றத்தின் முன் கொண்டுவரப்பட்டது. புதிய அரசியலமைப்புச் சட்டபூர்வமான அரசியலமைப்பு அல்ல என உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

## சூடானில் நடந்தமை

சூடான் நாட்டில் நடைபெற்றது என்ன? அங்கே கூட சில நேரத்தில் சில தலைவர்கள் கூடி, நாட்டுப் பட்டையம் ஒன்றைத் தந்தனர். இந்த நாட்டுப் பட்டையத்தின் அடிப்படையில் அரசியலமைப்பு யாக்க அவைகள் என்பது இடைக்கால ஆட்சி அமைக்கப்பட்டது.

இவை எந்த அடிப்படையில் எழுந்தன என்பதை நோக்க வேண்டும். 1956 ஜனவரி 1ம் நாள் வரை, சூடான் நாடு அன்னியரால் ஆட்சி செய்யப்பட்டது. பிரிட்டன், எகிப்து ஆகிய இரு நாடுகளும் இணைந்து சூடானை ஆட்சி செய்தன. 1956 ஜனவரி 1ம்நாள் சூடான் குடியரசு ஆகியது. நாட்டின் ஆட்சிப்பொறுப்பு, ஆட்சியுரிமை, இறைமை என்பன சூடானிடம் முறையாக மீளளிக்கப்பட்டன. குடியரசாகிய பொழுது புதியதோர் அரசியலமைப்பும் ஏற்படுத்தப்பட்டது.

1958 நவம்பர் 17ல் குடியரசு ஆட்சி புரட்சி மூலம் கவிழ்க்கப்பட்டது. இராணுவ ஆட்சி தொடங்கியது. ஜெனரல் அபொன்ட் இராணுவ ஆட்சித் தலைவராக, நாட்டின் தலைவராகப் பதவியேற்றார். 1964 ஒக்டோபர் 22வரை இர்ராணுவ ஆட்சி பெரும் தொல்லையின்றி நீடித்தது. அன்று கார்ட்டூன் பல்கலைக்கழக மாணவர்களின் கலவரத்தை அடக்க இராணுவத்தினர் சுட்டனர். இருமாணவர்கள் உயிர் இழந்தனர். மாணவர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டதை எதிர்த்து, நாடு முழுவதும் பொது வேலை நிறுத்தம் நடைபெற்றது. நாட்டில் அரசு செயற்படாமல் நின்றது. ஆட்சித்தலைவரைப் பதவி விலகுமாறு கோரிக்கை விடப்பட்டது.

1964 ஒக்டோபர் 30 ஆம் நாள் ஆட்சித்தலைவர் அபொன்ட் தனது இராணுவ ஆட்சியை கலைக்க ஒப்புக் கொண்டார். மக்களிடம் ஆட்சியைக் கையளிக்க சம்மதித்தார். மக்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார். இரண்டு நாட்களாக இக் கலந்துரையாடல் நடை பெற்றது. நாட்டுப் பட்டயம் ஒன்றைத் தயாரிப்பது பற்றி முக்கியமாக கலந்துரையாடினார். மக்களின ஆட்சி முழுமையாக ஏற்படும் வரை இடைக்கால ஆட்சி எவ்வாறு அமைய வேண்டும் என இவர்கள ஆலோசித்தனர்.

1964 அக்டோபர் 30 ஆம் நாள் இராணுவ ஆட்சி முற்றாகக் கலைக்கப்பட்டு, படைத்துறை சார்ப்பற்ற ஆட்சி அமைக்கப்பட்டது. நாட்டுப் பட்டயம் தான் இந்த இடைக்கால அரசுக்கு சட்ட வலிமையைக் கொடுத்தது.

அரசியலமைப்பு ஒன்றைப் புதிதாக எழுதவேண்டும், ஏற்றுக்கொள்ளவேண்டும், சட்டமாக்க வேண்டும், மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற நோக்கம் நாட்டுப்பட்டயத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இதற்காக அரசியலமைப்பு யாக்க அவை ஒன்றினை மக்கள் தெரிவு செய்ய வழி செய்தது.

அரசியலமைப்பு யாக்க அவை ஒன்றை மக்கள் தெரிவு செய்தார்கள். ஒரு தலைப்பட்சமாக எழுதப்பட்ட நாட்டுபட்டயத்தை மக்கள் ஏற்றுக் கொண்டார்கள். அதனால் அரசியலமைப்பு யாக்க வையைத் தெரிவு செய்தார்கள்.

இந்த அரசியலமைப்பு யாக்க அவை புதிய அரசியலமைப்பு ஒன்றை தயாரித்ததுடன், இடைக்கால அரசின் சட்டப் பேரவையாகவும் செயற்பட்டது.

ரொடீஷியாவில் நடைபெற்ற ஒரு தலைப்பட்சமான ஆட்சியுரிமை மாற்றத்தில் மக்கள் பங்கு கொள்ளவில்லை. ஆனால்சூடானில் நடைபெற்ற ஒரு தலைப்பட்சமான ஆட்சியுரிமை மாற்றத்தில் மக்களின் கருத்து அறியப்பட்டது. மக்கள் ஒரு மனதாக ஒருமித்த ஆவலுடன் நாட்டுப் பட்டயத்தை ஏற்ற அரசியலமைப்பு யாக்க அவையைத் தெரிவு செய்தார்கள்.

## 1970 இல் பொதுத் தேர்தல்

1970ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பல கட்சிகள் போட்டியிட்டன. ஆறாவது பாராளுமன்றத்தில் ஆட்சி செய்த ஐக்கிய தேசியக்கட்சி, நாடெங்கனும் வேட்பாளர்களைப் போட்டிக்கு நிறுத்தியிருந்தது.

(தொடரும்)

# யசூசி அகாசி - தமிழ்ச்செல்வன்

# செவ்வாயன்று சந்தித்துப் பேச்சு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை, யப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாசி சந்தித்துப் பேச்சு நடாத்தவுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நாளை திங்கட்கிழமை தாயம் திரும்பவுள்ளார்.

இவர் தாயகம் திரும்பியதும் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை ஜப்பானியத் தூதுவர் யசூசி அகாசி, கிளிநொச்சியில் தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் என இலங்கைக்கான ஜப்பானியத் தூதரகம் செய்தி வெளியிட்டுள்ளது.(ற-121)

# கலை இலக்கியப் போட்டிகளை நடாத்துவதற்குத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு பிரதேச செயலாளர்பிரிவு கலாசாரப் பேரவை கலை, இலக்கியப் போட்டிகளை நடர்த்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் பிரதேச செயலாளர் எஸ். திருவாகரன் தலைமையில் செயலகத்தில் நடைபெற்ற கலாசாரப் பேரவைக் குழுக் கூட்டத்திலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சிறுகதை, கவிதை, ஓரங்க நாடகம், ஓவியம், கர்நாடக இசை, பரத நாட்டியம், நாட்டார்பாடல் போன்றன திறந்த போட்டிகளாக நடாத்தப்படவுள்ளன.

இதேவேளை, இப் பிரதேசத்துக் குட்பட்ட மறைந்த, வாழ்கின்ற கலைஞர்கள், எழுத்தாளர்களின் விபரங்களையும் ஆக்கங்களையும் சேகரித்து நூலுருவில் பேணப்பட வேண்டும் என்ற விடயம் இக் கூட்டத்தல் பிரதேச செயலாளர் எஸ். திருவாகரனால் முன்வைக்கப்பட்டது.

இதறகமைய இத்திட்டம் அடுத்த கட்டமாக செயற்படுத்தப்படுவது குறிதது விரிவாகக் கலந்து ஆலோசிக்கப்பட்டது.

(து)

# வீட்டுக் குப்பைகளை வீதியில் கொட்டாதீர்கள்

## மாநகர சபை ஆணையாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக் குட்பட்ட குடியிருப்பாளர் தமது வீட்டுக் கழிவுகளை வீதியில் கொட்ட வேண்டாம் என யாழ்.மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க. குணராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காக்கைதீவில் யாழ். மாநகர சபையினால் கழிவுகளைக் கொட்டுவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மாற்று நட வடிக்கை எடுக்கப்படும் வரை குடியிருப்பாளர்கள் தமது வீட்டுக் குப்பை களை வீதியில் போடாது புதைத் தோ அல்லது வேறு விதமாகவோ அழிக்குமாறு யாழ்.மாநகர சபை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாறாக வீதியில் குப்பைகளைக் கொட்டுவது தெரியவரின் அதற்கான தண்டததை அவர்கள் செலுத்த வேண்டியிருக்கும் என அச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ச)

# ஆலோசனை சபைக் கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கலந்து கொள்ளும்

(கொழும்பு)

சமாதான நல்லிணக்கத்திற்கான தேசிய ஆலோசனை சபையின கூட்டம் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் ஸ்ரீலஙகா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கலந்து கொள்ளவுள்ளது.

அக்கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ரி.ஹசன் அலி தமது தீர்மானம் பற்றி நேற்று சமாதான செயலகத்திற்கு அறிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் பீடத்தைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள் தேசிய ஆலோசனை சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ச-121)

# விவாத அரங்கு - 6

விடயம்

மதுமாற்றத் தடைச் சட்டம்
தேவையானதா?
தேவையற்றதா?

நடுவர் : விதூரன்

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்

அனுப்பவேண்டிய முகவரி
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# சிறுவர் அரங்கம்

## உலகிலேயே எந்த மொழியில் சொற்கள் மிக அதிகம்?

சொற்கள் மூலம் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளப் பயன்படும் சாதனமே மொழி.

உலகெங்கும் 5000 மொழிகள் பேச்சுவழக்கில் உள்ளன. இந்தியாவில் மட்டும் பேச்சு மொழிகள் உட்பட 845 மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றுள் 22 மொழிகள் முக்கியமானவை.

ஒவ்வொரு மொழிக்கும் தனித்தனியான வரிவடிவம் உண்டு. எழுத்துக்களைக் குறிப்பிட்ட வரிசையில் அமைத்தால் சொற்கள் உருவாகின்றன.


உலகிலேயே சொல்வளம் மிகுந்த மொழி ஆங்கிலம்தான். இம்மொழியில் 790,000 சொற்கள் உள்ளன. இவற்றுள் 300,000 கலைச் சொற்களும் அடங்குகின்றன.

ஆனால் எந்தவொரு மனிதனும் வாழ்நாள் முழுதும் தனது எழுத்திலும் பேச்சிலுமாக 600,000 சொற்களுக்கு மேல் பயன்படுத்துவதில்லை என்பது மொழியியல் நிபுணர்களின் கருத்து.


உலகெங்கும் 40 கோடி மக்கள் ஆங்கிலம் பேசுகிறார்கள். ஆனாலும் இம்மொழி அதிகமாகப் பேசப்படும் மொழியல்ல. வடசைனாவில் மண்டாரின் (Mandarin) என்ற மொழிதான் 67 கோடியே 50லட்சம் மக்களால் பேசப்படும் மொழியாகும்.

ஆங்கிலத்திலேயே மிக அதிகமான பொருள் கொண்ட சொல் எது தெரியுமா? செட் (Set) என்ற சொல்தான் அது. இதற்குப் பெயர்ச்சொல்லில் 58பொருளும், வினைச்சொல்லில் 126 பொருளும், உரிச்சொல்லில் 10பொருளும் உண்டு.

## இவை உங்களின் ஓவியங்கள்



கோபிராஜ்
கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை.



S. தர்ஷினி
யா/இந்துக் கல்லூரி



R. விஜிந்தன்
யா/மத்திய கல்லூரி

## காகம்



காகம் நல்ல காகம்
கறுப்பு நிறக் காகம்
காகா என்றே கரையும்
களத்து மேட்டில் அமரும்

யாரும் இல்லை என்றால்
அருகே வந்து பார்க்கும்
சோற்றுப் பானை திறக்கும்
சுற்றும் முற்றும் பார்க்கும்

உண்ண உணவு கிடைத்தால்
உடனே கத்திக் கரையும்
சுற்றத் தாரை அழைக்கும்
சொகுசாய் கொத்தி உண்ணும்

நாமும் காக்கை போல
நாளும் கூடி வாழ்வோம்!
சேமத் தோடு வாழ
சிறந்த வழி இதுவே!

சு.விதுஷன்
யா/இந்து ஆரம்ப பாடசாலை

## பொது அறிவு

1. இலங்கையில் தற்போது பல்கலைக்கழக வசதியினைப் பெற்றிராத மாகாணம் எது?
2. இலங்கையில் சட்டத்தினால் பாதுகாப்புப் பெற்ற விலங்கொன்றாகப் பெயரிடப்பட்டுள்ள பாம்பு இனம் எது?
3. இலங்கையில் முதன்முதலாக மிதக்கும் மின் நிலையம் எங்கே அமைக்கப்பட்டுள்ளது?
4. இலங்கையில் பொறியியல் பீடங்களைக் கொண்ட பல்கலைக்கழகங்கள் எவை?
5. இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் உரையை உத்தியோகபூர்வமாக அடக்கி வெளிவரும் வெளியீடு யாது?
6. இலங்கையின் விமானநிலையங்களில் மிகப் பழமையானது எது?

சொ.நித்தியா, யா/பெரியபுலம் ம.வி.

## விவசாயி பெற்ற மதிப்பினை

ஓர் ஊரில் வயலில் உழுது பாடுபடும் விவசாயி ஒருவன் இருந்தான்.

அவன் தினமும் காலையில் வேலைக்குப் போகும்போது, மரத்தடியில் அமர்ந்து ஓவியம் தீட்டும் ஓவியர் ஒருவரைப் பார்ப்பது வழக்கம்.

கடுமையாக உழைத்துவிட்டு மாலையில் வீடு திரும்பும்போது விவசாயி, சிலசமயம் ஓவியர் அதே இடத்தில் அமர்ந்து யோசித்துக் கொண்டிருப்பதையும் பார்ப்பான்.

அப்போதெல்லாம் விவசாயி, 'என்ன இது? மக்களுக்காக நான் இவ்வளவு உழைத்துப் பாடுபடுகிறேன்! இந்த ஓவியர் இப்படி சும்மா உட்கார்ந்துகொண்டிருக்கிறாரே? இவரால் நமது கிராமத்து மக்களுக்கு என்ன பயன்?' என்று நினைப்பது வழக்கம்.

அறுவடைகாலம் வந்தது.

உழவன் அறுவடை செய்த நெல் மூட்டைகளை விலைக்கு விற்பதற்கு வண்டியில் ஏற்றி நகரத்திற்கு எடுத்துச் சென்றான்.

அப்போது நகரத்தில் கோலாகலமாக ஒரு பெரிய விழா நடந்துகொண்டிருந்தது.

அந்த விழாவில் உழவன், தான் தினந்தோறும் பார்த்து, 'சோம்பேறி' என்று நினைத்துவந்த ஓவியரை நகரத்து மக்கள் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் உட்காரவைத்து ஊர்வலமாக அழைத்துவருவதைப் பார்த்தான்.

ஆவலுடன் உழவன் பக்கத்தில் இருந்த வியாபாரியிடம் இங்கே என்ன நடக்கிறது? எதற்காக இவருக்கு இவ்வளவு மரியாதை?" என்று விசாரித்தான்.

அதற்கு வியாபாரி, "உனக்குத் தெரியாதா? இந்தப் பிரபலஓவியர் உங்கள் ஊரைச் சேர்ந்தவர்தானே? இவர் வரைந்த சிறந்த ஓவியத்திற்காக அகில ஓவியக் கண்காட்சியில் இவருக்கு முதல் பரிசு கிடைத்திருக்கிறது! ஆகவே, இவரால் உங்கள் ஊருக்கே பெருமை! அருகில் உள்ள எங்களுக்கும் பெருமை'' என்று மகிழ்ச்சியுடன் கூறினார்.

''நான் வருடத்தில் சில மாதங்களே உழைத்து 30 மூட்டைகள் நெல்லை அறுவடைசெய்தேன். அது ஒரு சிலருக்கு உணவாக அமைந்தது.

இந்த ஓவியரோ சில நாட்கள் ஆற்றங்கரை மரத்தடியில் அமர்ந்து ஓவியம் உருவாக்கினார். அது இன்று பல்லாயிரக்கணக்கான மக்களுக்குப் பெருமையைத் தருகிறது. இந்த நாட்டுக்கும், பிறந்த ஊருக்கும் பெருமையைத் தேடித் தந்திருக்கிறது! இவரைப் போய் நான் சோம்பேறி என்று நினைத்தேனே என்னுடைய அந்த எண்ணம் தவறு'' என்று அந்த விவசாயி நினைத்தான்.



சிறுவர்களே! கதையைப் படித்தீர்களா? தவயோகிகளும், முற்றும் துறந்த சந்நியாசிகளும் குகையிலும் தனிமையிலும் அமர்ந்து தியானம் செய்யும் போது, 'அவர்கள உழைத்து சேவை செய்யாமல் இருக்கிறார்கள்!' என்று பலர் நினைக்கக்கூடும்.


ஆனால், உண்மை என்னவென்றால், மகான்களின் தியானமும், தவமும், தர்மத்தைச் செழிக்க வைத்து நல்லவர்களை ஊக்குவித்து, நாட்டுக்குப் பெரும் நன்மை செய்கிறது. அதை நாம் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும்.


## கணக்குப்புதிர்

ஒரு பண்ணையில் மிருகங்களும், பறவைகளும் இருந்தன. அந்தப் பண்ணையில் எல்லாமாக 180 தலைகளும் 500 கால்களும் எண்ணியதாக சிறுவன் புதிர் போடுகிறான். அப்படியானால் பண்ணையில் உள்ள பறவைகள் எத்தனை? மிருகங்கள் எத்தனை?

## கண்டுபிடியுங்கள்

இங்கே காணப்படும் சில பொருட்கள் கீழேயுள்ள படத்தில் சில இடங்களில் சரியாகப் பொருந்தும். அந்தப் பகுதிகளைச் சரியாகக் கண்டுபிடித்துவிட்டால் உங்களுக்கு ஒரு சபாஷ் போட்டுக்கொள்ளுங்கள்.





## விடைகள்

பொது அறிவு
1. ஊவா மாகாணம் 2. மலைப்பாம்பு 3. கொழும்பு துறைமுகத்தில் 4. பேராதனை, ருகுணு, மொறட்டுவ 5. ஹன்சாட் 6. இரத்மலானை.

புதிர்
பறவைகள் 110, விலங்குகள் 70

# முப்பத்தைந்து வருடங்களுக்குப் பின்னர் இந்திய மண்ணில் ஆஸிக்கு தொடர் வெற்றி

## நாக்பூரில் 342 ஓட்டங்களால் இந்தியா படுதோல்வி

இந்திய - அவுஸ்ரேலிய் அணிகளுக்கு இடையிலான நாக்பூரில் நடைபெற்ற 3 ஆவது டெஸ்ட்



போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றியைப் பெற்றதைத் தொடர்ந்து, 35 வருடகாலத்திற்குப் பின்னர் இந்திய மண்ணில் டெஸ்ட் தொடரை வெல்லும் வாய்ப்பு ஆஸி அணிக்குக் கிடைத திருக்கிறது.



முதல் இனிங்ஸில் அவுஸ்திரேலிய அணி 398 ஓட்டங்களைப் பெற்றது.


இந்தியா - 185 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இந்தியா FOLOW ON ஆனபோதும் ஆஸி அணி தொடர்ந்து ஆடியது. 2 ஆவது இன்னிங்ஸில் மூன்றாம் நாள் ஆட்டமுடிவில் 3 விக்கெற்றுக்களை இழந்து 202 ஓட்டங்களைப்பெற்று 415 ஓட்டங்கள் முன்னணியில் வலுவான நிலையில் இருந்தது. ஆயினும் நான்காம் நாள் தொடர்ந்து ஆடிய ஆஸி அணி 5 விக்கெற்றுக்களை இழந்து 329 ஓட்டங்களைப் பெற்றபோது ஆட்டத்தை நிறைவு செய்வதாக அறிவித்தது.

கிளார்க் 73 ஓட்டங்களைப் பெற்றபோது கும்ளேயின் பந்து வீச்சில் தனது விக்கெற்றை இழந்தார். 4 ஆவது விக்கெற்றுக்காக மார்ட்டினுடன் 143 ஓட்டங்களை அவர் சேர்த்தார். சதம் அடிப்பாரென எதிர்பார்த்திருந்த மார்ட்டின் 97 ஓட்டங்களைப் பெற்றபோது சஹீர்கானின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

பந்துவீச்சில் சஹீர்கானும், முரளி கார்த்திக்கும் தலா 2 விக்கெற்றுக்களை வீழ்த்தினர்.

543 ஓட்டங்கள் என்ற மிகப் பெரிய கடினமான இலக்குடன் களம் இறங்கிய இந்திய அணிக்கு, ஆடுகளம் வேகப்பந்துவீச்சாளர்களுக்கு சாதகமாக இருந்ததால் துடுப்பாட்டம் மளமளவென வீழ்ச்சி கண்டது. சோப்ரா - 1, டிராவிட் - 2, சச்சின் -2, லக்ஷ்மன் -2, கைவ்- 7 என விக்கெற்றுக்கள் மளமளவென சரிந்து இந்திய அணி 5 விக்கெற்றுக்களை இழந்து 37 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. அந்நிலையில் சேவாக் மட்டும் 6 ஆவது விக்கெற்றுக்காக பார்த்திவ் பட்டேலுடன் சேர்ந்து 65 ஓட்டங்களைப் பெற்றனர். சேவாக் 58 ஓட்டங்களில் ஷேன்வோனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். பார்த்திப் 32 ஓட்டங்களில் தனது விக்கெற்றை இழந்தார்.

துடுப்பாட்ட வீரர்கள் விரைவாக ஆட்டமிழக்க பந்து வீச்சாளர்கள் அடித்தாடி ஓட்டங்களைப் பெற்றனர். அஜித் அஹர்கார் மிகச சிறப்பாக ஆடி ஆட்டமிழக்காது 44 ஓட்டங்களைப் பெற்றார். கார்த்திக் 22 ஓட்டங்களையும் சஹீர்க் கான் 27 ஓட்டங்களையும்




பெற்றனர். அவர் ஷேன்வோனின் ஒரு ஓவரில் 2 சிக்சர் அடித்தார்.

இறுதியில் இந்திய அணி 200 ஓட்டங்களில் சகல விக்கெற்றுக்களையும் இழந்தது. பந்து வீச்சில் கில்லஸ்பி 4 விக்கெற்றுக்களையும், மெக்ராத், வோன், காஸ்பரோவிஸ் ஆகியோர் தலா 2 விக்கெற்றுக்களையும் பெற்றனர்.

இதன்மூலம் ஆஸி அணி 342 ஓட்டங்களால் மகத்தான வெற்றி பெற்றது. 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட இத்தொடரில் இன்னும் ஒரு போட்டி நடைபெறவேண்டிய நிலையில் ஆஸி அணி 2:0 என்ற அடிப்படையில் இப்போதே தொடரைவென்றுவிட்டதன் மூலம் போடர் - கபாஸ்கர் கிண்ணத்தையும் தனதாக்கிக் கொண்டுள்ளது.

அதேவேளை, இந்திய அணி தனது சொந்த மண்ணில் மிக



மோசமான தோல்வியைப் பெற்றிருக்கிறது. இதற்கு முன் 96- 97 இல் தென்னாபிரிக்காவிடம் 329 ஓட்டங்களால் கொல்கத்தா மைதானத்தில் தோற்றிருந்தது.

இத்தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் 3 ஆம் திகதி மும்பையில் ஆரம்பமாகிறது. (7)

## இலங்கைக்கு எதிரான கராச்சி டெஸ்ட் வெற்றி பெறும் நிலையில் பாக்.அணி

இலங்கை அணிக்கும் பாகிஸ்தான் அணிக்குமிடையே பாகிஸ்தான் கராச்சி மைதானத்தில் நடைபெறும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில், பாகிஸ்தான் அணி 1:1 என தொடரைச் சமப்படுத்தும் நோக்கில் வெற்றிபெறும் எதிர்பார்ப்புடன் விளையாடுகின்றது.

அந்த வகையில் பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்ட வீரர்கள் நிதானமாக விளையாடி ஓட்டங்களைக் குவிக்கின்றனர்.

கடந்த வியாழனன்று ஆரம்பமான இரண்டாவது போட்டியில் இலங்கை அணி தனது முதல் இனிங்ஸில் 208 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

ஜெயசூரிய -26, அத்தப்பத்து- 44, மஹல -16, களுவிதாரண ஆகக்கூடுதலாக 54 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் அப்துல் ரஸாக்- 5, கனேரியா-3, ரியாஸ் அவ்ரிடி 2 விக்கெற்றுக்களை வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இங்னிங்சை விளையாடிய பாகிஸ்



தான் அணி இரண்டாம் நாள் ஆட்டமுடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 298 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக யசீர்ஹமிட்டும், இம்ரான் பர்கத்தும் களமிறங்கினர். எனினும் ஹமிட் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து யூனிஸ்ஹான் பர்கத்துடன் இணைந்து அபாரமாக ஆடி ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். பர்கத் 12 பவுண்டரிகள் உட்பட 72 ஓட்டங்களைப் பெற்றபோது சமிந்தவாஸின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து அணித்தலைவர் இன்சமாம் யூனிஸ்கானுடன் இணைந்தார். அவர் ஒரு சிக்சர் 6 பவுண்டரி உட்பட 124 ஓட்டங்களைப் பெற்றார். இது அவரது 6 ஆவது செஞ்சரியாகும். அவர் ரங்கன ஹேரத்தின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த ரியாஸ் அப்ரிடியால் 9 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது. இரண்டாம் நாள் ஆட்டமுடிவில் பாகிஸ்தான் அணி 4விக்கெற்றுக்களை இழந்து 298 ஓட்டங்களை பெற்றிருந்தது. இன்சமாம்ஆட்டமிழக்காது 79 ஓட்டங்களைப் பெற்றார். நேற்று 3 ஆம் ஆட்டத்தின்போது அவர் தனது செஞ்சரியொன்றைப்பெற்றிருக்கின்றார் ஆட்டம் தொடர்ந்து நடைபெறுகின்றது. (7)

## விளையாட்டு செய்திகள்

## பங்களாதேஷ் - நியூஸிலாந்து டெஸ்ட்

# நியூசிலாந்து அணி அமோக வெற்றி

# 29 தொடர் தோல்வி பங்களாதேஷிற்கு

நியூசிலாந்து - பங்களாதேஷ் அணிகளிடையே சிட்டகொங்கில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி 1 இன்னிங்ஸ் மற்றும் 101 ஓட்டங்களால் அமோக வெற்றி பெற்று 2:0 என்ற அடிப்படையில் தொடர் வெற்றியையும் பெற்றிருக்கிறது. இத்தோல்வி மூலம் பங்களாதேஷ் அணி டெஸ்ட் போட்டிகளில் தொடராக 29 ஆவது தோல்வியை பெற்றிருக்கிறது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணித்தலைவர் பிளெமிங் முதலில் தமது அணி துடுப்பெடுத்தாட விருப்பம் தெரிவித்து களமிறங்கினார். நியூசிலாந்து அணியின் முதல் இன்னிங்ஸில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக மத்தியூ சின்கிளையரும் மார்க் ரிச்சட்ஸனும் ஆட்டத்தைத் தொடக்கினர். முதலாவது விக்கெற்றாக சின்கிளையர் 28 ஓட்டங்களில் ரபீக்கின் பந்து வீச்சில் நேரடியாக விக்கெற் வீழ்த்தப்பட்டு ஆட்டமிழந்தார். ரிச்சட்ஸன் 28 ஓட்டங்களைப் பெற்றபோது ஆட்டமிழந்தார்.

நியூசிலாந்து அணித் தலைவர் மிகச் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி இரட்டைச் சதத்தைப் பெற்றார். அவர் 202 ஓட்டங்களைப் பெற்றபோது ரஹ்மானின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார் நியூசிலாந்து அணி சார்பில் ஸ்ரைறிஸ்-89, நாதன் அஸ்ரில் - 39, மார்ஷல் - 69, ஓரம் -38, மக்கெலம் 17 ஓட்டங்களைப் பெற்றனர். உதிரிகளாக 40 ஓட்டங்கள் கிடைத்தன.

பந்து வீச்சில் ரபீக் 3 விக்கெற்றுக்களையும் இனாமுல்



ஹயூக் 2 விக்கெற்றுக்களையும், ரஜின் சாலே 1 விக்கெற்றையும் பெற்றனர்.

நியூசிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 6 விக்கெற்றுக்களை இழந்து 545 ஓட்டங்களைப்பெற்ற நிலையில் தனது இன்னிங்சை நிறைவு செய்தது.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்சை ஆடிய பங்களாதேஷ் அணி 182 ஓட்டங்களில் சகல விக் கெற்றுக்களையும் இழந்தது. பங்களாதேஷ் அணி சார்பில் ஜாவிட் ஓமர் ஆகக் கூடுதலாக 58 ஓட்டங்களைப் பெற்றார். ரபீக் 32 ஓட்டங்களையும் அஹமட் 20 ஓட்டங்களையும் பெற்றனர். பங்களாதேஷ் அணி 182 ஓட்டங்களில் தனது சகல விக்கெற்றுக்களையும் இழந்தது. பந்து வீச்சில் டானியல் விற்றோரி மிகச் சிறப்பாக பந்துவீசி 6 விக்கெற்றுக்களையும், வைஸ்மன் 3 விக்கெற் றுக்களையும் பெற்றனர்.

FOLOW ON ஐத் தவிர்க்கவேண்டிய ஓட்டங்களைப் பெறாத நிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்தும் ஆடிய பங்களா தேஷ் அணி 262 ஓட்டங்களுக்கு சகல விக்கெற்றுக்களையும் இழந்தது.

இதில் பாஸ்யா ஆகக் கூடுதலாக 66 ஓட்டங்களைப் பெற்றார். முஷாட்ட -51 ரஜின் சாலே - 35 ரபீக் - 31 பந்து வீச்சில் முதல் இன்னிங்சை போலவே விற்றோரி 6 விக்கெற்றுக்களைப் பெற்றார். வைஸ்மன் 2 விக்கெற்றுக்களைப் பெற்றார்.

இதன் மூலம் நியூசிலாந்து அணி 1 இன்னிங்ஸ் 101 ஓட்டங் களால் அமோக வெற்றிபெற்றதன் மூலம் தொடர் வெற்றியையும் பெற்றிருக்கிறது. பங்களாதேஷ் அணி இது வரை தான் விளையாடிய 32 டெஸ்ட் போட்டிகளில் 29 ஆவது தோல்வியைப் பெற்றிருக்கிறது. ஏனைய 3 போட்டிகளும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்திருக்கிறது.

இப்போட்டியின் ஆட்ட நாயகளாக பிளெமிங்கும் தொடரில் 20 விக்கெற்றுக்களைப்பெற்ற விற்றோரி தொடர் நாயகனாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். (7)

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி - குறள்

வலம்புரி

# இரு தலைவர்களுக்கும் பதவிப் பிரச்சினை

**நாட்டில் நிலவுவது இனப்பிரச்சினை. ஆனால் இலங்கையின் இரண்டு முக்கிய அரசியல் தலைவர்களுக்கும் இருப்பதோ பதவிப் பிரச்சினை.**

**இதன் காரணமாகவே இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதில் காலம் நீள்கிறது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் பொறுத்தவரை ஜனாதிபதிப் பதவி தன்னுடன் முற்றுப்பெறவேண்டும் என்பதே எண்ணமாகும்.**

**இதற்காக அவர் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். அதில் ஒன்றாக ஜனாதிபதி பதவியை இல்லாதொழிப்பதற்கு எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிடமும் கோரிக்கை விட்டிருந்தார்.**

**எனினும் அந்த கோரிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி மறுத்தது. இவ்வாறு மறுக்கப்பட்டதற்கான காரணம், ஜனாதிபதிப் பதவியை இல்லாதொழித்தால் நாட்டுப் பிரச்சினை சீர்குலைந்து போய்விடும் என்பதற்காகவல்ல.**

**மாறாக தற்போது ஜனாதிபதியாக இருக்கும் சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக்காலம் 2005 ஆம் ஆண்டில் முடிவுற்றதும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு தனக்குக் கிடைக்கும் என்பது ரணில் விக்கிரமசிங்கவின் நம்பிக்கை.**

**அதேநேரம் சந்திரிகா குமாரதுங்க இன்னுமொரு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு இலங்கை அரசியல் யாப்பு இடந்தரப்போவதில்லை. எனவே சந்திரிகா குமாரதுங்க போட்டியிட முடியாததால் அந்த இடத்தை அனுரா பண்டாரநாயக்காவோ அன்றி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவோ நிரப்பவேண்டும்.**

**ஆயினும் சந்திரிகா குமாரதுங்கவிற்கு இருந்த ஆதரவு மேற்கூறப்பட்ட இருவருக்கும் இல்லை என்பதால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தானே வெற்றிபெறுவேன் என ரணில் வீக்கிரமசிங்க நம்புகின்றார்.**

**சகல நிறைவேற்று அதிகாரங்களும் கொண்ட பதவியை விட்டுக்கொடுக்க யாருக்குத்தான் விருப்பம் வரும். ஆதலால் நானும் ஒருதடவை ஜனாபதியாக இருந்துவிட்டு அதன்பின்னர் அந்தப் பதவியை இல்லாதொழிக்கலாமேயென ரணில் விக்கிரமசிங்க கருதுகிறார்.**

**இங்குதான் இரு தலைவர்களுக்கும் பிரச்சினை ஏற்படுகிறது. சந்திரிகா குமாரதுங்கவைப் பொறுத்தவரை ஜனாதிபதிப் பதவியை தன்னுடன் இல்லாது ஒழிக்காவிட்டால் அடுத்த சந்தர்ப்பம் ரணில் விக்கிரமசிங்கவிற்கே கிடைக்கும் எனவும், ரணில் ஜனாதிபதியானால் தனது பாடு பெரும் திண்டாட்டமாகும் எனவும் அவர் உணர்கிறார்.**

**இதனால் ஜனாதிபதிப் பதவிக்கு இருக்கக் கூடிய நிறைவேற்ற அதிகாரங்களுக்குள் அந்தப் பதவியையே இல்லாதொழிக்கும் அதிகாரம் தனக்கு இருக்குமா என ஆராய்கின்றார்.**

**இதற்காக அவர் ஜே.ஆர்.ஜெயவர்தனாவால் 1978 இல் அறிமுகப்படுத்திய அரசியல் யாப்பைத் துருவித்துருவித் தேடுகிறார்.**

**இலங்கை அரசியல் யாப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு சர்வவல்லமை அதிகாரமும் உண்டு. ஆனால், ஜனாதிபதிப் பதவியையே இல்லாதொழிக்கும் அதிகாரமும் அதற்குள் இருக்குமா என்பது எவருக்குமே தெரியாது.**

**ஏனெனில் கடந்த காலத்தில் இருந்த ஜனாதிபதிகளுக்கு இத்தகையதொரு ஆராய்வு தேவைப்படவில்லை. இப்போது அத்தேவை ஜனாதிபதி [illegible] ஏற்பட்டுள்ளது.**

**[illegible] ஜனாதிபதி பதவியை இல்லாதொழிப் [illegible] அம்மையாரும், அதைக் காப் [illegible] ரணில் ஐயாவும் ஈடுபட்டுள்ளனரே [illegible] வர்களுக்கு நாடுபற்றி - மக்கள் பற்றி எந்த [illegible] அக்கறையுமே இல்லை.**

## ஒஸ்லோ உடன்படிக்கை குறித்த பாலாவின் கருத்துக்கு தென்னிலங்கையில் பாரிய சர்ச்சை கிளம்புகிறது

(கொழும்பு)

ஒஸ்லோ உடன்படிக்கை என பிரத்தியேகமான எதுவித ஒப்பந்தமும் செய்து கொள்ளப்பட்வில்லை என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அண்மையில் வெளியிட்ட கருத்துக் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியிடம் ஜே. வி. பி. விளக்கம் கோரியுள்ளது.

அத்துடன் முன்னாள் பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவும் இது விடயம் குறித்து பூரணமான விளககமளிக்க வேண்டும் எனவும் ஜே.வி.பி யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கோரிக்கை விடுத்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் பிரிவினைக் கோரிக்கையினைக் கைவிடுவது தொடர்பான அடிப்படைகளைக் கொண்டதாகத் தெரிவிக்கப்படும் இத்தகையதொரு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டதாகத் தெரிவித்து ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களை ஏமாற்றிவிட்டதாக ரில்வின் சில்வா குற்றஞ்சாட்டியுள்ளார்.

இத்தகையதொரு உடன்படிக்கை எதுவும் செய்து கொள்ளப்படாத நிலையில் ஒஸ்லோ உடன்படிக்கையின் அடிப்படையில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதியை வலியுறுத்தி வருகின்றது.

இதன் மூலம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தை சிக்கலில் தள்ளிவிட ரணில் விக்கிரமசிங்க முயன்று வருகின்றார் எனவும் ரில்வின் சில்வா மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இது விடயம் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில,

நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருவது போல ஒஸ்லோ உடன்பாட்டின் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தை இடம்பெற வேண்டும் என்பதே தற்போதும் எமது நிலைப்பாடு. இது குறித்து விடுதலைப்புலிகளிடம் விளக்கம் கோரவுள்ளோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவ் விவகாரம் குறித்து சமாதான முயற்சியின் அனுசரணையாளர்களான நோர்வே, ஜப்பான், ஐரோப்பிய, ஒன்றியம அமெரிக்கா ஆகிய நாடுகளுடனும் பேசவிருப்பதாகத் தெரிவித்திருக்கும் அவர், விடுதலைப்புலிகள் தாம் முன்னர் ஒப்புக் கொண்ட விடயங்களில் இருந்து பின்வாங்கக் கூடாது எனவும் கருத்து வெளியிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் ஒஸ்லோ உடன்பாடு என்று பிர[illegible]யேகமாக ஒப்பந்தம் எதுவும் செய்து கொள்ளப்படவில்லை [illegible]ன்பதே அன்ரன் பாலசிங்கத்தின் நிலைப்பாடாக இருக் கின்ற அதேவேளை, [illegible] சுயநிர்ணய உரிமைகளின் அடிப் படையிலான ஒ[illegible]சித்தீர்வை பரிசீலிக்கத் தாம் தயாராக இருப்பதாகவ "போரும் சமாதானமும்" என்ற தனது நூலில குறிப்பிட்டுள்ளமையும் கவனிக்கத்தக்கது.

உள்ளக சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சுயாட்சித் தீர்வைப் பாிசீலிக்கலாம் என்று கூறுவதன் மூலம் புற சுயநிர்ணய உரிமையை விடுதலைப்புலிகள் கைவிட்டு விட்டார்கள் என்று தெரிவிக்கப்படுவதே தவறானது என்று குறிப் பிடும் அன்ரன பாலசிங்கம் உள்ளக சுயநிர்ணய அடிப்படையிலான தீர்வுத் தடை ஏற்பட்டால் பிரிந்து சென்று தனி நாடு அமைப்பதைத் தவிர வேறு வழி இல்லை என்று தமிழீழத் தேசியத தலைவர் வே. பிரபாகரன் தெரிவித்திருப்பதையும் சுட்டிக் காட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-121)

## யாழ். போதனா வைத்தியசாலையின் அமைவிடம் மாற்றப்படல் வேண்டும்

### அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலை யாழ். நகர வர்த்தக மையத்திற்கு உட்பட்டு இருப்பதால் இங்கு சிகிச்சை பெற வரும் நோயாளர்கள் பல கஷடங்களையும் அனுபவித்து வருகின்றனர். எனவே இவ் வைத்தியசாலையை வைத்திய சாலைக்குப் பொருத்தமான இடத்தில் அமைப்பது குறித்து தீர்மானம் எடுக்குமாறு கோரி யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

நேற்று முன்தினம் அனுப்பப்பட்ட இக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையானது அனைத்து வகைகளிலும் இடநெருக்கடியும் போதிய வசதிகளும் அற்று இருக்கின்றது இதனால் இங்கு மேலதிகமான விஸ்தரிப்புப் பணிகளையோ அல்லது அபிவிருத்திப் பணிகளையோ செய்ய முடியாத நிலை காண[illegible]றது.

இந்நிலையில் தொலைநோக்கை அடி[illegible]யாகக் கொண்டு சிந்திக்கும் எந்தவொரு நிறுவனமும் அ[illegible] புதிய விஸ்தரிப்புப் பணிகளைச செய்வதற்கு ஆர்வம் காட்டமாட்டாது.

எனவே இது விடயத்தில் யாழ்ப்பாண மக்களின் கருத்துக்களைத் திரட்டும் வகையில் சுகாதார அமைச்சு ஒரு ஆலோசனைக் கூட்டத்தினைக் கூட்டுவது பொருத்தப்பாடாக இருக் கும்.

யாழ்ப்பாணம் வைத்தியசாலையானது அமைதியான சூழ்நிலையில் இ[illegible]வது நல்லதாகும் என அக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. (ப-16)

## ஐ.தே.க. ஆட்சியில் நிதி மோசடி;

### முன்னாள் அமைச்சர் இருவர் உட்பட அறுவருக்கு நாட்டை விட்டு வெளியேறுவதற்குத் தடை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் சமுர்த்தி, சமூக பாதுகாப்பு அபிவிருத்தி நிதியை மோசடி செய்ததாக குற்றம் சுமத்தி முன்னாள் அமைச்சர்கள் இருவர் உட்பட 6 பேருக்கு எதிராக கொழும்பு பிரதம நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசேட குற்றப் புலனாய்வுத்துறையினரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் சமுர்த்தி விவகார அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கா, மகளிர் விவகார அமைச்சர் அமரா பியசீலி ரத்னாயக்க, மொனராகலை மாவட்ட சமுர்த்தி மகளிர அபிவிருத்தி நிதியத் தலைவி நில்மினி விஜயக்கோன், செயலாளர் சஞ்சய புலத்சிங்க, பொருளாளர் அனோமா குமாரி ஹேரத் மற்றும் இரத்தினபுரி மாவட்ட சமுர்த்தி, சமூக அபிவிருத்தி தலைவி மேகாவதி தாபுறு ஆகியோருக்கு எதிராகவே இந்த வழக்குத் தாக்கல் செயயப்பட்டுள்ளது. இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்றுக கொண்ட கொழும்பு பிரதம நீதிமன்ற நீதிபதி சரோஜினி குசேல விஜயவர்தன, குறிப்பிட்ட 6 பேரும் நீதிமன்ற அனுமதி யின்றி நாட்டை விட்டு வெளியேறுவதற்குத் தடை விதித்துள்ளார்.

இவர்களைக் கைது செய்ய வேண்டிய தேவையேற்பட்டால் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென குற்றப் புலனாய்வுத் துறையினருக்கு உத்தர விட்ட நீதிபதி, மேலதிக அறிக்கை சமர்ப்பிப்பதற்காக எதிர் வரும் 8ஆம் திகதி வரை கால அவகாசமும் வழங்கியுள்ளார். (ந-121)

## வர்த்தகத் தொழில் துறையினருக்கும் வரவு-செலவுத் திட்டத்தில் நிவாரணம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் வருமானத்துக்கு 48 சத வீதத்திற்கும் கூடுதலான தொகையை வழங்கும் சிறிய நடுத்தரக் கைத்தொழில துறையினர் மற்றும் வர்த்தகத் தொழில் துறையினருக்கு சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு- செலவுத் திட்டத்தில் நிவாரணம் கிடைக்குமென நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் சங்வர்த்தன சங்கமய அபிவிருத்தித் திட்டத்தின் பிரகாரம், தலா ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் 5 சிறிய நடுத்தரக் கைத்தொழில் பயிற்சித் திட்டங்களை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைய உள்ளூர்சிறிய, நடுத்தரக் கைத்தொழில் முயற்சியாளர்கள இந்தியா போன்ற பாரிய சந்தைகளை இலக்காக வைத்து உற்பத்தியிலும் சேவை வழங்கலிலும் ஈடுபட முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-121)

## இருதயநே[illegible] சிகிச்சை பிரிவின் பாதுகாப்பு உபகரணங்களில் மின்சாரக் கசிவு!

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் இருதய நோய் சிகிச்சைப் பிரிவில் பயன்படுத்தப்படும் பாதுகாப்பு உபகரணங்களில் மின்சாரம் கசிவதாகவும் இதனால் நேற்று முன்தினம் அந்த சிகிச்சைப் பிரிவு தற்காலிகமாக மூடப்பட்டதாகவும் தெரிவக்கப்படுகின்றது. மேற்படி உபகரணங்களில் மின்சாரம் எவ்வாறு கசிகின்றது என்பது குறித்து கண்டறிவதற்காகவே இந்த இருதய சிகிச்சைப் பிரிவு மூடப்பட்டதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ஹெக்ரர் வீரசிங்க தெரிவித்தார். (க-61)

## ௐ தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

**செயல்முறை மதம் பற்றிய சாதாரண கருத்து எங்கே கொண்டு போய் விடுகிறது என்பதைக் கவனியுங்கள். பிறருக்கு நல்லது செய்வது பெரிய காரியம்தான். ஆனால அதுதான் எல்லாம் என்று சொல்லும் போது அது வெறும் உலோகாயதமாக மாறுவதான ஆபத்து இருக்கிறது. அது மதம் அல்ல; நாத்திகத்தை விடச் சிறந்ததும் அல்ல; மாறாக அதை விடச் சற்றுக் குறைவானதே.**

சுவாமி விவேகானந்தர்

# வட-கிழக்கு மாகாண ஆளுநரின் யாழ். விஜயத்திற்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜயவர்த்தனவின் யாழ்ப்பாணத்திற்கான விஜயத்திற்கு பல்வேறு அமைப்புக்களும் கண்டனம் வெளியிட்டுவரும் இந் நிலையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் இவரது விஜயத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இதுவிடயம் குறித்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில்,

வடக்குக் கிழக்கு மக்களுக்கு ஒரு நிலையான இயல்புநிலை தோற்றுவிக்கப்படாத சூழ்நிலையில், ஆளுநர் வருகைக்கு பல்கலைச் சமூகம் முற்றுமுழுதான எதிர்ப்பினைத் தெரிவித்துக்கொள்கிறது.

எமது மக்கள் போர் அனர்த்தங்களினால் பல்வேறுபட்ட அழிவுகளுக்கு மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். சொத்துக்களை இழந்து, சொந்த வீடுகளை படையினரின் ஆக்கிரமிப்பினால் பறிகொடுத்து உயர் பாதுகாப்பு வலயம் என்ற இராணுவ வேலிகளால் நிலம், உடைமைகளை இழந்து வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி தற்போது இரண்டு வருடங்கள் நிறைவடைந்துள்ளபோதும் இந்தப் போர்நிறுத்தமும், 6 கட்டப் பேச்சுவார்த்தைகளும் எந்தவகையான இயல்பு வாழ்க்கைக்கும் தமிழ்மக்களை இட்டுச்செல்லவில்லை.

இவ்வாறான நிலையில் வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் இங்கு வருவதுகூட வெளி உலகத்தினருக்கு உண்மைக்குப் புறம்பான கருத்தினை திணிப்பதற்கும், ஒரு கண்துடைப்புக்குமான நிகழ்வாகவே நாம் கருதுகின்றோம்.

எனவே ஆளுநர் இங்கு வருவதைக் கண்டிப்பதுடன், அதற்கான எதிர்ப்பையும் தெரிவித்துக்கொள்கிறோம். யாழ். குடாநாட்டுக்கு ஆளுநர் வருவாராக இருந்தால் வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியநிலை ஏற்படும்.

தமிழ்மக்களுக்கு எந்தவகையான அபிவிருத்தி முன்னெடுப்புக்களும் மேற்கொள்ளப்படாத நிலையில், மாறாக யுத்தம் ஒன்றைத் தோற்றுவிக்கும் வகையில் பல வெளிநாட்டு இராணுவ அதிகாரிகளை அழைப்பதும், இராணுவ நிலைகளை பலப்படுத்துவதிலும்தான் கவனத்தைச் செலுத்திக்கொண்டு இருக்கும் சிங்கள அரசாங்கத்தின் எந்தவொரு ஆளுநரும் எமது தமிழ் மண்ணில் கால்பதிக்கத் தகுதியற்றவர்கள்.

நீதியானதும், நிரந்தரமானதுமான சமாதானத்தையே தமிழ்மக்களாகிய நாம் எதிர்பார்க்கின்றோம். அந்தவகையில் எமது மக்களுக்கு, எமது மக்களின் வாழ்வியலுக்கு இயல்புநிலை இன்றியமையாத ஒன்றாகும். இவை ஏற்படுத்தப்படும்வரை அரச அதிகாரிகளின் கண்துடைப்புக்கான எமது மண்ணின் மீதான கால்பதிப்புக்களை நாம் இனியும் அனுமதிக்கப்போதில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜயவர்த்தனவின் யாழ்ப்பாணத்திற்கான விஜயத்திற்கு தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகமும் தனது கண்டனத்தையும், எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

(நெல்லியடி)

நெல்லியடி ம.ம.வித்தியாலய பழைய மாணவர் சங்கக் கூட்டம் இன்று மாலை 4 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறுமென சங்கச் செயலாளர் சுதர்சன் அறிவித்துள்ளார். (ந-108)

## உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று மாலை 4 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. இவ் இறுதிப் போட்டியில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியும் பாசையூர் சென் அன்ரனிஸ் அணியும் மோதவுள்ளன. (ச-121)

# புளொட் உறுப்பினர் கடத்தலுடன் புலிகளுக்குத் தொடர்பில்லை

## கண்காணிப்புக்குழுவிடம் சுட்டிக்காட்டு

(வவுனியா)

வவுனியா மாவட்ட அரசியல்துறையினருக்கும் இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு மிடையிலான சந்திப்பொன்று நேற்றுக் காலை 10மணிக்கு வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பின்போது கடந்த செவ்வாய்க்கிழமை புளொட் இயக்க உறுப்பினர்கள் இருவர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட சம்பவம் குறித்தும், வவுனியா மாவட்ட சமகால நிலைமைகள் குறித்தும் ஆராயப்பட்டது. புளொட் உறுப்பினர்கள் கடத்தப்பட்டமைக்கும் தமக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என யுத்தநிறுத்தக் கண்காணிப்புகுழுவிடம் விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். (121)

## மிலேனியம் கணக்கிலிருந்து அபிவிருத்திக்கு உதவி

(கொழும்பு)

அமெரிக்க அரசாங்கத்தின் மில்லேனியம் கணக்கிலிருந்து அபிவிருத்தி உதவி கோரி இலங்கை தனது விண்ணப்பத்தை தூதுவர் ஜெப்ரி லுன்ஸ்ரெட்டிடம் கையளித்துள்ளது.

அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றை ஏற்று வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இதற்கான விண்ணப்பத்தைக் கையளித்துள்ளார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட சில நாடுகளின் அபிவிருத்திக்கு உதவுவதற்காக அமெரிக்காவினால் இந்நிதியம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 2004 மே மாதத்தில் உதவி பெறத் தகுதிவாய்ந்த 16 நாடுகளில் இலங்கையும் ஒன்றாகத் தெரிவாகியிருந்தது.

மில்லேனியம் கணக்கிலிருந்து நிதிகளை வழங்கும் பணி அமெரிக்க மில்லேனியம் சலஞ்ச் கோப்ரேஷன் நிறுவனத்தினால் கையாளப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-06)

### காணாமல்போனோர் விவகாரங்களில்

# இலங்கை மனிதஉரிமை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் திருப்தியளிக்கவில்லை

## யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவிப்பு

இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் குமார நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார்.

அவரை யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியப் பொறுப்பாளர் சுதாஸ் ஆகியோர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட காரியாலயத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

இச்சந்திப்பின்போது யாழ்.குடாநாட்டு மக்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

அரச படையினரால் யாழ். மக்களின் தொழில்கள். பாதிப்படைந்துள்ளன். சட்டத்தை பேணும் பொலிஸாரிடமிருந்து மக்கள் நேர்மையான தீர்வை பெறமுடியாது உள்ளது. இதற்கு பொலிஸாரில் பலர் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவராக இருப்பதே காரணமாகும். அத்துடன் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதில் மொழிப் பிரச்சினைகள் உள்ளதால் மக்கள் தமது பிரச்சினைகளைப் பேசி நியாயப்படுத்த முடியாதநிலை உள்ளது.

இதுகூட ஒரு மனிதஉரிமை சம்பந்தப்பட்ட பிரச்சினையாகவே நாம் கருதுகின்றோம். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் சுதந்திரமான வகையில் மனிதஉரிமை மீறல் நிலையம் இயங்குகின்றது. அது தனது ஆக்கபூர்வமாக நடவடிக்கையில் தொடர்ந்தும் ஈடுபட்டுவருகிறது.

காணாமல்போனவர்களைப் பற்றிய விடயங்களில் இலங்கை மனிதஉரிமை ஆணைக்குழு எந்த விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார். (ப-5)

### பதவியை இராஜிநாமாச் செய்த

# சுமங்கள தேரரின் இடத்திற்கு இவ்வாரம் புதியவர் நியமனம்

(கொழும்பு)

ஜாதிக ஹெலஉறுமயக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநமாச் செய்த கொலன்னாவ சிறி சுமங்கள தேரரின் இடத்திற்கு இவ்வாரம் புதிய உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாகத் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொலன்னாவ சிறி சுமங்கள தேரருக்கு அடுத்தபடியாக ஹம்பகா மாவட்டத்தில் போட்டியிட்டு அதிக விருப்பு வாக்குகளைப் பெற்ற ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் இவ்விடத்திற்கு புதிதாக நியமிக்கப்படவுள்ளார்.

வெளிநாடு சென்றுள்ள தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க நாடு திரும்பியதும் புதிதாக நியமிக்கப்படவுள்ள உறுப்பினரின் பெயர் விபரம் வெளியிடப்படவுள்ளது.

தேர்தல் ஆணையாளரைத் தவிர வேறு எவரும் பாரளுமன்ற உறுப்பினர் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தலை வெளியிட முடியாது. இதனாலேயே புதிய பாரளுமன்ற உறுப்பினரை நியமிப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதென தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ற-121)

---

### ஜனாதிபதி...

வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியாவிற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள நிலையில் ஜனாதிபதியும், இந்தியாவிற்கான விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-121,08)

---

### சமாதானப்...

இதன்போது விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து கருணா பிரிந்துசென்ற பின்னர் ஏற்பட்டுவரும் மனிதப் படுகொலைகள், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் படையினர், புலிகளுக்கிடையில் காணப்படும் பரஸ்பர உறவு என்பன குறித்து விரிவாக ஆராய்ந்தார். இச் சந்திபின்போது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மகேஸ் சமரதிவாகரவும் கலந்துகொண்டார்.

பின்னர் சமாதான குழுவினரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை விரைவில் ஆரம்பிக்கவேண்டும் என்பதில் மக்கள் ஆர்வமாக உள்ளதாக அகாசி தெரிவித்தார். (121-8)

---

### ஜனாதிபதித் தேர்தல்...

திகதியை நிர்ணயிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையாளரிடமே இருக்கிறது. குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடாத்துவதற்கு ஜனாதிபதியினால் ஆலோசனை வழங்கமுடியும். ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் திகதியை தீர்மானிப்பது தொடர்பான அதிகாரங்கள் தேர்தல் ஆணையாளருக்கே உள்ளது. எது எவ்வாறாக இருந்தாலும் 2005 ஆம் ஆண்டு நவம்பரில் தான் தேர்தல் நடத்தவேண்டுமென்றும் பீரிஸ மேலும் வலியுறுத்தி கூறினார். (த-08)

---

### ரவூப் ஹக்கீம்...

தற்போது சமாதான முயற்சிகளில் முஸ்லிம் மக்களின் தனிதரப்பு விடயம் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கொள்கையளவில் இணக்கத்தை வெளியிட்டுள்ளார். எனவே இதனை அடிப்படையாககொண்டே ஜனாதிபதிக்கும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் ஆதரவு வழங்க முன்வந்ததாக புதிய அமைச்சர்கள் மூவரும் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் முஸ்லிம் தரப்பினருக்கு எதிராக இவ் அரசாங்கம் செயற்பட்டாலோ அல்லது கருத்துக்களை வெளியிட்டாலோ நாம் தொடர்ந்து அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கமாட்டோம். அத்துடன் அமைச்சர் பதவியை துறக்கவும் தயாராகவே உள்ளோம்.

அத்துடன் பாராளுமன்றத்தில் தனிக் குழுவாகவே செயற்படத்தீர்மானித்துள்ளோம். அதற்கு அமைச்சர் நஜீவ் ஏ.மஜித் தலைவராக செயற்படவுள்ளார். இவ்வாறு செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (த-121)

---

### கிழக்கு...

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மகேஸ் சமரதிவாகர ஆகியோர் கலந்துகொண்டனர்.

இராணுவச் சோதனைச் சாவடிகளில் மக்கள் மீதான கெடுபிடிகள் இனி இடம் பெறாமல் தடுக்க நடவடிக்கை எடுப்பதாக இராணுவத்தினர் உறுதியளித்ததாக கௌசல்யன் தெரிவித்தார்.

படைத்தரப்பால் வழங்கப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாதுவிட்டால் தொடர்ந்துவரும் சந்திப்புக்கள் குறித்து மீள்பரிசீலனை செய்யவேண்டி ஏற்படுமென படைத்தரப்புக்கு தாம் கூறியதாக கௌசல்யன் தெரிவித்தார். மீண்டும் இருதரப்புச் சந்திப்பு எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ச-121)

---

### சிறிலங்கா...

படுத்தியுள்ள ஜனாதிபதி சந்திரிகா, நாடு தழுவிய ரீதியில் ஜே.வி.பி. கட்சியினர் தற்போதைய அரசியல் நெருக்கடி குறித்து வெளியிடும் கருத்துக்கள் மிகவும் முட்டாள்தனமானவை என்றும், ஒரு கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிக்குரிய ஆகக்குறைந்த தகுதிகூட அற்ற நிலையில் மிகவும் கீழ்த்தரமாக ஜே.வி.பி. செயற்படுவதாகவும் தெரிவித்துள்ளார். கடந்த காலத்தில் பயங்கரவாதத்தை தங்களது அதிகார ஆயுதமாகப் பயன்படுத்திய ஜே.வி.பி.யினரை சுதந்திரக் கட்சி, தன்னுடன் கூட்டுச்சேர்த்துக் கொண்டதன் மூலம் மட்டுமே ஜே.வி.பி. தற்போதைய அரசியல் சுகங்களையும், அனுகூலங்களையும் அனுபவிக்கிறது. இதை மறந்து, தான்தோன்றித்தனமாக ஜே.வி.பி. புலம்புவதை சுதந்திரக்கட்சி இனிமேலும் பொறுத்துக் கொண்டிருக்கப் போவதில்லை என்றும் சந்திரிகா தெரிவித்துள்ளார். (ச)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.10.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.